மெய்விருத்திரன்

8

23-7-1935


72
[illegible]
N35.8.1
208725

ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாயநம.

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्य जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமஹாபாரத தாத்பர்யநிர்ணயம்

### இருபத்தி இரண்டாவது அத்தியாயம்

(ஸ்ரீமத். வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

(7 வது வால்யம் 356-பக்கம் தொடர்ச்சி)

அர்ஜுனனும் இந்திரபகவானின் முகத்தைப் பார்த்துக் கொண்டு சந்தோஷப்பட்டான். இவ்வாறு அர்ஜுனன் ஐந்து வருஷம் ஸ்வர்க்கலோகத்தில் வாசம் செய்தான். அப்பொழுது இந்திரபகவான் மகத்தாயும் திவ்யமாயுமுள்ள அஸ்திரங்களை அர்ஜுனனுக்குக் கொடுத்தார். அப்பொழுது ஊர்வசி என்னும் அப்ஸரஸ் அர்ஜுனனிடம் வந்து அவனுடைய ஸங்கமம் ஏற்படப் பிரார்த்தித்தாள். அப்பொழுது அர்ஜுனன் தான் ஒரு மனுஷ்யன் தானென்று எண்ணி, ஊர்வசியே! நீ புரூரவஸ்ராஜனின் பத்னியாய் இருந்ததால் நீ என் குலத்திற்கு தாயாராக இருக்கிறாய் என்று சொல்லி, அவளை ஏற்றுக்கொள்ளாமல் தடுத்துவிட்டான். அப்பொழுது ஊர்வசி கோபித்துக்கொண்டு நீ நபும்ஸகனாய் போ என்று அர்ஜுனனுக்கு சாபம் கொடுத்தாள். ஒருவருஷம் தான் நீ நபும்ஸகரூபத்துடன் இருந்து வா, பிறகு உனக்கு நபும்ஸகத்வம் இருக்கப்போவதில்லை என்று இந்திரபகவான், அந்த சாபத்தை நிவிருத்தி செய்யும் சாமர்த்தியம் அவருக்கு இருந்த

208729



தால், அவ்வாறு அனுக்ரஹம் செய்தார். பிறகு அர்ஜுனன் சித்ரஸேனன் என்ற கந்தர்வனிடமிருந்து கந்தர்வ வேதமான ஸங்கீத சாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டும் அப்படியே இந்திரபகவானிடமிருந்து அஸ்திரங்களைக் கற்றுக்கொண்டும் இந்திரலோகத்தில் வாஸம் செய்தான்.

## ஸ்ரீ கிருஷ்ணரின் கைலாஸ யாத்திரை.

ஸ்ரீ கிருஷ்ணர் ஸுபத்திரையுடனும் அபிமன்யுவுடனும் சேர்ந்து துவாரகைக்கு வந்து அங்கு வாஸம் செய்துகொண்டிருக்கும்பொழுது, ஒரு சமயம் இவ்வாறு யோசித்தார். நான் முன்பு ருத்திரபகவானுக்கு இப்படி வரன் கொடுத்தேன். தைத்தியர்களை மோகிப்பதற்காக, ருத்திரா! உன்னிடமிருந்து பிள்ளை முதலியவைகளை அடையும் வரனைப் பெறுகிறேன். இவ்வாறு புராணவசனங்களும் இருந்து வருகின்றன. ஹே ருத்திரா! நான் மனுஷ்யாதிகளில் ஓர் அம்சத்துடன் துவாபரம், த்ரேதா முதலான யுகங்களில் அவதாரம் செய்து உன்னை ஆராதித்து வரனைப்பெறுகிறேன். நீ சைவாகமங்களை இயற்றி அவைகளால் ஜனங்களை என்னிடம் பக்தியில்லாதவர்களாய்ச்செய். என்னை மறைத்துவிடு. அதனால் மோக்ஷத்திற்குப் போகவிருந்த தைத்தியர்கள் தமஸ்ஸுக்கு போகயிருப்பார்கள். என்றிவ்வாறு பகவான் விஷ்ணு, சிவனுக்குச் சொன்னவார்த்தையை ஸத்யமாகச்செய்ய ஸ்ரீ கிருஷ்ணரின் அபிப்பிராயத்தை அதிகமாய் அறிந்தவளான ருக்மணி ஸ்ரீ கிருஷ்ணரின் மனோபிப்பிராயத்தை அறிந்தவளானதால், அவள் தனக்கு மகன் பிறந்திருப்பினும், ஹே தேவா! ஸ்ரீ கிருஷ்ணு! பலிஷ்டனையும் எல்லா அஸ்திரங்களையும் அறிந்தவர்களில் உத்தமனையுமுள்ள பிள்ளை எனக்கு பிறக்கவேண்டும் என்று பிள்ளை பிறக்கும் விஷயத்தில் ஸ்ரீ கிருஷ்ணருக்கு ப்ரீதிகரமாய்ப்பேசினாள். இவ்வாறு ருக்கணியால் பேசப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணர் அஸுரர்களின் மோகனார்த்தம் கருடன்மீது ஏறிக்கொண்டு, ஸ்ரீ வேதவியாஸரின் ரூபத்துடன் தான் இருக்கும் பதரிகாசிரமத்திற்கு பிரயாணம் செய்தார். "ஹே ருத்திரா! எந்த நடிப்பு தைத்திய ஜனங்களை மோகிக்கச்செய்யுமோ அப்பேர்ப்பட்ட



தான நடிப்பு, வஞ்சனை முதலியவைகளை நான் சிருஷ்டி செய்கிறேன். மகா பாகுசாலியான ருத்திரா! நீ மோஹகரமான சாஸ்திரத்தைச்செய். இதரர்களான ததீசி முதலானவர்களால் இயற்றச்செய். மகாபுஜயுக்தனான ருத்திரா! எப்போதும் நடைபெறுதிருக்கும் லிங்கத்தின் மூலத்தைத்தேடுதல் முதலானவைகளையும் உனக்கு ஸ்வாதந்திரியம் முதலானவைகளையும் அந்த சாஸ்திரத்தில் காட்டு. உன்னை பிரஸித்திப்படுத்திக்கொள். என்னை பிரஸித்தியில்லாதவனாய்ச் செய். நான் ஜனங்களை மோகிப்பதற்காக உன்னை பூஜை செய்யப்போகிறேன். நான் அவ்வாறு மோக சாஸ்திரங்களைச் செய்யாவிடில் அஸுரர்கள் தமஸ்ஸுக்குச் செல்லமாட்டார்கள். என்றிவ்வாறு என் அபிப்பிராயமிருக்கிறது. இப்படி முன்பு விஷ்ணு சிவனிடம் சொல்லியிருந்தபடி தன் வாக்யத்தை ஸத்தியமாகச்செய்துகொள்ள பதரிகாசிரமத்திற்கு வந்து சேர்ந்தார். ப்ரபுவான ஸ்ரீ கிருஷ்ணரை ஸர்வக்ஞர்களான ரிஷிகள் பூஜித்தனர். ஸ்ரீ கிருஷ்ணர் இரவில் ரிஷிகளின் நடுவில் உட்கார்ந்திருக்கும்பொழுது கண்டாகர்ணன், கர்ணன் என்ற இரண்டு பிசாசங்கள் பரமசிவனால் கட்டளையிடப்பட்டவர்களாய் ஸ்ரீ கிருஷ்ணரைப்பார்ப்பதற்காக துவாரகைக்குப் போக விருப்பங்கொண்டு இந்த இடம் வந்து சேர்ந்தனர். அந்த இரண்டு பிசாசங்களும் ரிஷிகளின் நடுவில் இருந்த ஸ்ரீ கிருஷ்ணரை நேரில் கண்டும், அவர் விஷ்ணு என்று ஞானமில்லாமல் தங்களுடைய பிசாச காரியங்களைச்செய்து ஸ்ரீ கிருஷ்ணரை தியானம் செய்து அதனால் அவர்களின் ஹிருதய கமலத்தில் சதுர்புஜமுள்ள ஸ்ரீ கிருஷ்ணரை தரிசித்தனர் அவைகள் தங்கள் ஹிருதயகமலத்திலிருந்த வெளியிலுள்ள ஸ்ரீ கிருஷ்ணரைப் பார்த்துவிட்டு ஆச்சரியமடைந்து பக்தியுடன் பலவகை ஸ்தோத்திரங்களைச் செய்து மங்களமான அந்த பிசாசங்கள் அநேகதடவை நமஸ்காரம் செய்தனர். பகவானான ஸ்ரீ கிருஷ்ணர் அந்த பிசாசங்களிடம் பிரஸன்னராய் தன் கையால் அவைகளைத்தொட்டு ஓர் க்ஷணத்தில் அவர்களை திவ்யகந்தர்வர்களாய்ச் செய்தார். அந்த கண்டாகர்ணன் கர்ணன் இவர்களால் மீண்டும் ஆடல் பாடல்களால் பூஜிக்கப்பட்டவராய் ப்ரபுவான ஸ்ரீ கிருஷ்ணர் பர்வதசிரேஷ்டமான கைலாஸபர்வதத்

திற்குச் சென்றார். அங்கு தபம் செய்பவர் போல் காட்டிக் கொடுத்தார். விஷ்ணுவான ஸ்ரீ கிருஷ்ணர் நித்யமானக்ஞானத்தால் தன் அனந்தாதிகுணங்களை தியானம் செய்துகொண்டு, ருத்திரனின் உத்தேசமாய் தபஸ் செய்பவர்போல் துஷ்ட ஜனங்களை மோகித்தார். உலகங்களை மோகனம் செய்யும் ஸ்ரீ கிருஷ்ணர் முன்பு பரமசிவனைப்பார்த்து, உன் உத்தேசமாய் பன்னிரண்டு வருஷம் நான் தைத்தியர்களை மோகிப்பதற்காக தபஸ் செய்யப் போகிறேன். தேவர்கள் இந்த விஷயத்தில் சங்கடப்படவேண்டாம் என்று சொன்னதால், அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணர் பிரஹஸ்பதிக்கு ஆக்ஞையிட்டு, அவரை ஒரே நாளில் பன்னிரண்டு ராசிகளிலும் சஞ்சரித்து வரச்செய்தார். ஆகையால்தான் அந்த ஒரு நாள் பிருஹஸ்பதி வருஷத்தின்படி அதாவது மானத்தின்படி பன்னிரண்டு வருஷமாயிற்று. ஸ்ரீ கிருஷ்ணர் ஒரே நாளில் ஒவ்வொரு ராசியையும் ஒவ்வொரு வருஷமாய் மனதால் ஏற்படுத்தி அவைகளில் உபவாஸாதி நியமங்களைச் செய்தார். தன் பக்தர்களுக்கு மனதாலேயே பன்னிரண்டு வருஷங்களின் விரதபலம் வருவதற்காக, தன் மனதின்படி ஓர்மாஸத்தில் செய்யவேண்டிய விரதத்தை நூற்றைம்பது சுவாஸ காலத்தில் ஏற்படுத்திக்கொண்டார். என்றால் இதன் அபிப்பிராயமாவது; ஒருவருஷத்திற்கு பன்னிரண்டு மாதங்கள் வீதம் பன்னிரண்டு வருஷங்களுக்கு நூற்றுநாற்பதிக் நான்கு மாதங்களாகின்றன. ஒரு நாளுக்கு இருபத்தொன்றாயிரத்து அறுநூறு சுவாசங்கள் வெளிவருகின்றன. இதில் நூற்றைம்பது சுவாசகாலத்தை ஓர் மாஸமாய்ச் செய்துகொண்டார். அதாவது ஐந்து சுவாஸ காலத்தை ஓர் நாளாய்ச் செய்துகொண்டார். இந்த காலத்தில் ஓர் வருஷம் மாஸம் நாள் இவைகளில் செய்யப்பட வேண்டிய கர்மங்களைச்செய்தார் என்று தாத்பர்யம். இந்த தபஸ் செய்யும் பொழுது அவருடைய ஸேவகர்களான கருடன் முதலானவர்கள் ஸ்ரீ கிருஷ்ணருக்கு கைங்கரியம் செய்தனர். ஸ்ரீ கிருஷ்ணர் பாபிஷ்ட ஜனங்களுக்கு சிவாயஸ்வாஹா என்று சிவனை உத்தேசித்து, ஹோமம் செய்வதுபோல் காட்டிக்கொடுத்து, சிவனென்ற சப்தத்தால் முக்யமாய் சொல்லப்படுகிறவரான தன் உத்தேசமாகவே ஹோமாதி கர்மங்களைச் செய்தார்.



இவ்வாறு தவத்திலிருக்கும் கமல மலர் இதழ் போன்ற விசாலமான நேத்ரமுள்ள ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்ப்பதற்காக, ப்ரம்மா, இந்திரன் முதலான தேவர்கள், யோகிசிரேஷ்டர்களான ஸனகாதிகள், ப்ரஜேசுவரர்கள், கந்தர்வர்கள், சித்தர்கள், உத்தம யக்ஷர்கள், பக்ஷிகள் முதலானவர்கள், பித்ரு தேவதைகள், ரிஷிச்ரேஷ்டர்களின் ஸமூகங்களுடன், வந்து சேர்ந்தனர். பரம சிவனும் எல்லா தேவர்களுக்கும் தேவதையாய் தன்னால் ஸ்தோத்திரம் செய்து கொள்ளப்படுகிறவராயுள்ள ஸ்ரீ கிருஷ்ணர் தன்னுடைய இருப்பிடமான கைலாஸத்தின் ஸமீபத்தில் வந்திருப்பதாய் அறிந்து, தன்னுடைய ப்ரமதகணங்களுடன் கூடி பார்வதி ஸமேதராய் பக்தியால் உண்டான மிக்க பரபரப்புடன் உத்தமமான பூஜாதிரவியங்களை எடுத்துக்கொண்டு சீக்கிரமே ஸ்ரீ கிருஷ்ணரிடம் வந்து சேர்ந்தார். பரமசிவன் ஜகத்துக்கு முக்ய அதிபதியாயுள்ள ஸ்ரீ கிருஷ்ணரின் இருபாதங்களுக்கு பக்தி பூரணராய் வந்து சிரஸ்ஸால் நமஸ்காரம் செய்தார். உத்தமராயும் ஸம்பூர்ணமான ஷட்குணங்களை சரீரமாகக்கொண்டவராயும் தோஷமற்றவராயும் பரமைச்வரியம் படைத்தவராயுமுள்ள ஸ்ரீ கிருஷ்ணரை உத்தமமான ஸ்தோத்திரம் செய்தார். ஸ்ரீ கிருஷ்ணர் அஸுர ஜனங்களை மோகிப்பதற்காக ருத்திரனுள்ளே இருக்கும் ருத்திரனெனப் பெயர்கொண்ட தன் ரூபத்தையே ருத்திராதி நாமங்களால் ஸ்தோத்திரம் செய்தார். ருத்திரன் ஸ்ரீ கிருஷ்ணர் செய்த ஸ்தோத்திரங்களைக் கேட்டு எல்லா தேவர்களையும் பார்த்து இவ்வாறு பேசினார். நான் உண்மையைச் சொல்கிறேன். இப்பொழுது என் வார்த்தையைக் கேளுங்கள். எல்லா ஸாதுஜனங்களாலும் விஷ்ணு மேலானவர் என்று அறியத் தகுந்தது. விஷ்ணுவின் அபரோக்ஷ ஞானத்திற்காக நானும் வாயு பகவானும் லக்ஷ்மிதேவியும் மார்க்கமாக இருப்பதாய் அறிய வேண்டும். விஷ்ணு எனக்கும் ப்ரம்மாவுக்கும் உத்தமர் என்னும் அர்த்தம் தான் ஸமஸ்த வேதார்த்தங்களின் நிச்சயமான விஷயம். மகாலட்சுமி என்ன, ஸகல ஜீவராசிகளென்ன, இவர்களைவிட ஸம்ஸார தசையிலும் சரியே, மோக்ஷத்திலேயும் சரியே, விஷ்ணுதான் உத்தமர் என்று நிச்சயமிருப்பதால் விஷ்ணுவின் ஸர்வோத்தமத்

தன்மையையே நீங்கள் ஸ்மரணம் செய்யுங்கள்; என்றிவ்வாறு பரமசிவன் சொல்லவும் எல்லா ஜீவர்களும் விருத்தியடைந்த விஷ்ணு பக்தியால் ஸ்ரீ கிருஷ்ணரை நமஸ்கரித்தனர். இந்திராதி தேவர்கள் முன்னமேயே ஞானவான்களாயிருப்பினும் பரமசிவன் சொன்னதாயுள்ள தத்வ நிர்ணயம் செய்வதான குணங்களைச்சொல்லும் மேற்கண்ட வாக்யங்களாலும், ஹரிவம்சத்தில் கூறப்பட்டதான வாக்யங்களாலும், அதிகமாய் மீண்டும் ஞானவிருத்தியை அடையப்பெற்றனர். தேவர்கள் ஸ்ரீ கிருஷ்ணரை ஸர்வதேவோத்தமர் என்று எப்பொழுதுமே அறிந்திருக்கின்றனர். ஆயினும் விஷ்ணுவின் உத்தமத்வத்தைச் சொல்லும் ப்ரமாணங்கள் விருத்தமான பல குணங்களைச் சொல்வதால் அந்த பிரமாணங்களின் விஷயத்தில் வறட்டு யுக்திகளால் வந்த சந்தேகங்கள் ருத்திரனின் வாக்யத்தால் பரிகாரமாயிற்று. பிறகு ஸ்ரீ கிருஷ்ணர் பரமசிவனை உன்னிடமிருந்து புத்திரனைப்பெறும் வரனைப் பெறுகிறேன் என்று முன்னொரு காலத்தில் சொன்ன வார்த்தையை ஸத்யம் செய்வதற்காக எனக்கு ஒரு மகப்பேறைத்தந்தருள்வாய் என்று தன் அபீஷ்டத்தைச் சொல்லிக்கொண்டார். அப்பொழுது பரமசிவன் சொன்னதாவது:— ஸ்ரீ கிருஷ்ணா! உனக்கு ப்ரத்யும்னன் என்று மகன் எப்பொழுது பிறந்திருக்கிறானோ அவன் என்னால் கொடுக்கப்பட்டவனென்று ஜனங்களின் பேச்சு இருந்து வருகிறது. அதற்கு என்ன காரணமென்றால், பூர்வத்தில் நான் மன்மதனை தகனம் செய்தேன். அப்பொழுது அவனுடைய பத்னியான ரதிதேவி தனக்கு புருஷனைக்கொடுக்கும்படி என்னை யாசித்தாள் அப்பொழுது நான் அவளைப்பார்த்து, ஸ்ரீ கிருஷ்ணரால் ருக்மணியிடம் ப்ரத்யும்னனென்று பிறக்கப்போகிறான்; அப்பொழுது நீ அவனைப்பர்த்தாவாய் அடையப்போகிறாய் என்று சொன்னேன். அந்தக் காரணத்தைக் கொண்டு ஹே கிருஷ்ணா! அந்த ப்ரத்யும்னன் உன் ஆக்ஞைப்படி என்னால் கொடுக்கப்பட்டவனாய் ஆகட்டும். தேவோத்தமனான கிருஷ்ணா! உனக்கு நான் தாஸனாய் இருக்கிறேன். சரணாகதனாயுள்ள என்னை ஸம்ரக்ஷணம் செய் என்றிவ்வாறு சொல்லி ஸ்ரீ கிருஷ்ணரை நமஸ்கரித்து பரமசிவன் மறுபடியும் தேவர்களைப் பார்த்துச்சொன்னார். ஹே



தேவர்களே! ஸ்ரீ கிருஷ்ணர் இங்கு வந்ததற்கு காரணமென்னவென்பதைச் சொல்லுகிறேன் கேளுங்கள். பிரம்மாவின் வரத்தால் அப்பொழுதே பிறந்த ஸ்ரீ கிருஷ்ண புத்திரரான மன்மதனின் அவதாரமாயுள்ள பிரத்யும்னனைத்தவிர இதராளால் கொல்லப்பட முடியாதவனான வக்ராஸுரன் என்ற ஓர் அஸுரன் இந்தவனத்தில் இருந்தான். அந்த அஸுரனைக் கொல்வதற்காகவே ஸ்ரீ கிருஷ்ணர் தன் மகனான அந்த ப்ரத்யும்னனை தன் வயற்றில் வைத்துக்கொண்டு இங்கு வந்து சேர்ந்தார். மகனான அந்த ப்ரத்யும்னனை தன் ஹிருதயத்தினின்றும் வெளியே வரச்செய்து, இந்த வனத்தின் ரூபத்தைக்கொண்டிருந்த அந்த வக்ராஸுரனை தகனம் செய்தார். ஹே தேவர்களே! இந்த வனத்தை தகனம் செய்திருப்பதைப் பாருங்கள். ஸ்ரீ கிருஷ்ணர் தன் இயற்கையான ஜ்வாலை மாலைகளால் க்ரூரனாயும் ஸ்ரீ கிருஷ்ணரின் தேஜஸ்ஸால் நிறைந்தவனாயுமுள்ள ப்ரத்யும்னனைக் கொண்டே, இந்தவனத்தையும் இங்கிருந்த வக்ராஸுரனையும் ஸம்ஹாரம் செய்து மீண்டும் தன் வயற்றில் அந்த ப்ரத்யும்னனை வைத்துக்கொண்டார். ஸ்ரீ கிருஷ்ணர் ஊருக்குப்போனவுடன் தன் கர்பத்திலுள்ள ப்ரத்யும்னனை மறுபடியும் ருக்மணியிடம் உண்டாக்கப் போகிறார். அந்த ப்ரத்யும்னன் பிறந்தவுடன் முன்போல் யௌவன வயதுள்ளவனாய் ஆகப்போகிறான். நான் சொன்ன எல்லா விஷயங்களும் நாரதாதி மகரிஷிகளின் ப்ரத்யக்ஷத்திற்கு தெரிந்ததே. இவ்வாறு ஸ்ரீ கிருஷ்ணர் தன் பூர்ணமான ஐசுவரியத்தால் க்ரீடிக்கிறார். என்றிவ்வாறு பரமசிவன் சொல்லவும், இந்திராதி தேவர்கள் ப்ரம்மருத்திரப்ரபுவான ஸ்ரீ கிருஷ்ணரை நமஸ்காரம் செய்தார்கள்.

## பௌண்ட்ரக வதம்.

பிறகு ஸ்ரீ கிருஷ்ணர், ப்ரம்மா இந்திரன் முதலான தேவர்களால் துதிக்கப்பட்டவராயும் நமஸ்காரம் செய்யப்பட்டவராயும் கருட பகவானின் தோளின் மீது உட்கார்ந்து கொண்டு, த்வாரகையை விட்டு புறப்பட்ட மூன்றாம் நாள் கைலாஸயாத்திரையை முடித்துக்கொண்டு ஊர்வந்து சேர்ந்தார். ஸ்ரீ கிருஷ்ணர் கைலாஸத்திற்கு புறப்பட்டுப்போன ஸமயம் பௌண்ட்ரக வாஸுதேவன் ஏகலவ்யனுடனும் தன் மாதாமகனான காசிராஜனுடனும்

அப்படியே மூன்று அக்ஷௌஹிணி சைனியத்துடனும் கூடி இரண்டாம் நாள் இராத்திரியில் துவாரகா பட்டணம் வந்தான். துவாரகையை பௌண்ட்ரகன் இடிப்பதைப் பார்த்து பலராமர் ஸாத்யகி இவர்களுடன் சேர்ந்த யாதவச்ரேஷ்டர்கள் யுத்தம் செய்தனர். பிறகு கிராதராஜனான ஏகலவ்யன் பாண விருஷ்டியைச் செய்தான். ஏகலவ்யனுடைய அஸ்திர சஸ்திரங்களால் விளக்கு வெளிச்சம் அவிந்து போய் யாதவச்ரேஷ்டர்கள் திடீரென்று மிகவும் சிரமமடைந்தவர்களாய் பலராமர் ஸாத்யகி இவர்களுடன் கூடி துவாரகைக்குள் ஓடிப்போய் விட்டனர். மறுபடியும் எல்லா யாதவர்களும் பெரிய தீவட்டி வெளிச்சத்தை எடுத்துக்கொண்டு பலராமனை முன்னிட்டுக்கொண்டு ஆயுத பாணிகளாய் பராஜயமடைந்த சிம்ஹங்கள் நல்ல குகையினின்றும் வெளிக்கிளம்புவது போல், துவாரகையினின்றும் யுத்தத்திற்கு புறப்பட்டனர். பிறகு பலராமர் ரதத்தில் ஏறிக்கொண்டு ஏகலவ்யனிடம் வந்து சேர்ந்தார். ஸாத்யகியும் பௌண்ட்ரகவாஸுதேவனும் யுத்தம் செய்தனர். ஒருவருக்கொருவர் ரதமில்லாமல் செய்துகொண்டனர். பிறகு அவர்கள் இருவரில் கதாயுத்தம் நடந்தது. அப்படியே வீரரான பலராமரும் ஏகலவ்யனும் பரஸ்பரம் ரதங்களை நாசம் செய்து விட்டு அகங்காரமுள்ளவர்களாய் பலத்தால் மிகுந்தவர்களான அவ்விருவர்கள் கதாயுதத்தால் யுத்தம் செய்தனர். இவ்விருஜோடிகளும் யுத்தம் செய்யும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணர் கருடன் மீதேறிக்கொண்டு இவர்கள் யுத்தம் செய்யுமிடத்திற்கு வந்துசேர்ந்தார். பலராமர் ஸ்ரீ கிருஷ்ணரைப் பார்த்து சந்தோஷம் நிறைந்த மனமுள்ளவராய் ஏகலவ்யனைக் கொல்ல விரும்பினார். பலராமர் இரண்டு கைகளாலும் கதாயுதத்தைத்தூக்கிக்கொண்டு வேகத்துடன் ஏகலவ்யனிடம் ஓடிவந்தார். அப்பொழுது ஏகலவ்யன் பலராமருடைய பலத்தையும் கோபத்தையும் கண்டு உயிர் தப்ப விரும்பி வெகுதூரம் ஓடினான். பலராமர் ஏகலவ்யனை விரட்டிக்கொண்டு அவனை பின்னாடி துரத்தினார். ஏகலவ்யன் பயந்துபோய் ஸமுத்திரத்தில் விழுந்தான். மேலான ஞானம் பலமுள்ள பலராமர் ஏகலவ்யனை ஸமுத்திரக் கரைவரையில் விரட்டி கதாயுதத்தைக் கையில் பிடித்தவராய் ஸமுத்திரக்கரையில் நின்றார். மகாபாபியான ஏகலவ்யன் பலராமரால் பீதியடைந்தவனாய் பின்னாடியே பலராமர் வருவதாய் ஸமுத்ரத்தின் ஜலத்திற்குள்ளே மூழ்கியே எண்பது யோஜனை தூரம் போய் ஓர் த்வீபத்தில் ஏறிக்கொண்டு பின்னாடி திரும்பிப் பார்த்தான்.

(தொடரும்)



# ஆசாரமாலை.

## காயத்ரீ விஷயம்.

(முன் 7 வது வாலியம் 372ம் பக்கம் தொடர்ச்சி.)

இதன் அர்த்தமாவது:— சூரிய மண்டலத்திலுள்ள ஸவிதா என்னும் ஸ்ரீ லக்ஷ்மீநாராயணன் கமலாஸனத்தில் நன்கு வீற்றிருப்பவராயும் காப்பு, கொலுசு, பாஜோபந்து, அரிஞாணம் முதலான ஆபரணங்களைத் தரித்திருப்பவராயும் காதில் மகர குண்டலங்களுள்ளவராயும் தலையில் கிரீடந்தரித்திருப்பவராயும் வைஜயந்தி மாலையை அணிந்திருப்பவராயும் ஸுவர்ணம் போல் தேக காந்தியுள்ளவராயும் சங்கு சக்ராதி ஆயுதங்களைப்பிடித்தவராயுமிருப்பதாய் நாம் எப்பொழுதும் தியானம் செய்ய வேண்டும். இவ்வாறு நரசிம்ம புராணத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆக்னேயபுராணத்தில் காயத்ரிஜப ப்ரகாணத்தில் தியானம் செய்யப் படவேண்டியதைப்பற்றி விஸ்தாரமாய் அறிவிப்பதாவது:— ஹ்ருதயேஷ்டதளம் பத்மம் கர்ணிகா மத்ய ஸம்ஸ்திதம்। ஓம் காரநாள விலஸத்வேத கந்திரவிப்ரபம்॥ தன்மத்ய நவரத்னாட்யம் தப்த ஹாடக ஸன்னிபம்। தஸ்யோபரிஷ்டாச்சதுரம் நாநாரத்னவிபூஷிதம்॥ வித்ரும ஸ்படிகாகார சதஸ்தம்ப ஸமன்விதம்। ஸூர்யகோடி ப்ரதீகாசம் விமானேன விராஜிதம்॥ முக்தா தாம விபூஷாட்யம் சித்ரத்வஜபதாகினம்। மல்லிகா குந்த மந்தார கேதகீ சம்பகாதிபி:। அன்யைஸ்ச கந்தபுஷ்பைஸ்ச ஸம்பிருதாதேவகர்ணிதம்। மகா சாகாஸ்புரத் புண்ய கல்ப விருக்ஷாந்தராஸ்திதம்॥ ரத்ன மண்டபமத்யஸ்தம் ஸ்வர்ண பத்மோபரிஸ்திதம்। ஸிம்ஹாஸனே ஸமாரூடம் ஸூர்யகோடி ஸமப்ரபம்॥ விஷ்ணும் சதுர்புஜம் லக்ஷ்மீ பூமிப்யாம் பார்ச்வ சோபிதம்। கிரீடஹாரகேயூரமண்டனைர் மங்களாக்ருதிம்॥ கடிஸூத்ர ப்ரம்மஸூத்ர நூபுரை ருபசோபிதம்। ஸ்ரீவத்ஸவன மாலாட்யம் துளஸீ தாமபூஷணம்। அநேக திவ்யாபரணம் கனகாபரணோஜ்வலம்। வரதாபய ஹஸ்தாட்யம் சங்கசக்ரஸ்புரத்கரம்। பீதாம்பரதாம் விஷ்ணும் ப்ரஸன்னவதனம் சுபம்। மனோஹரம் தயாமூர்த்திம் மந்தஹாஸமுகாம்புஜம்॥ அணிமாத்யைர் மூர்த்திமத்பி: அஷ்டைச்வர்ய ஸமன்விதம்। பத்தாஞ்சலி புடைர் பக்தைர் ப்ரம்ம ருத்திராதிபிஸ்ஸுரை:॥ காயத்ரிர்நாரதாத்யைஸ்ச ஸனகாத்யைஸ்ச சோபிதம்। ஸ்துதம் பரமகல்யாணம் ஸூதமாகதபந்திபி:॥ அனேக திவ்யாபரணம் ரணத்கங்கண சோபிதம்। திவ்ய ஸ்திரீவரயுக்மேன மந்த

பார்ச்வத்வயே ஹார்ம்॥ ஸ்வர்ண தண்டவிசித்ராப்பாம் சாமராப்யாம் விராஜிதம்॥ மாதவம் பரமாத்மானம் பக்தவத்ஸலமீச்வரம்॥ த்யாத்வைவம் ஹிருதி வாஸூர்ய மண்டலே மாதவம் ஜபேத்॥ இதன் தாத்பரியமாவது:— சூரிய மண்டலத்திலோ அல்லது ஹிருதயத்திலோ இவ்வாறு மாதவனான நாராயணனை தியானித்து காயத்ரியை ஜபிக்க வேண்டும். உள்ளே அஷ்டதளமுள்ள பத்மம் இருந்துவருகிறது. அங்கு நடுவில் பகவான் இருந்து வருகிறார். அந்த பத்மத்திற்கு ஓம் காரம் தண்டமாகவும் வேதம் வாசனையாகவுமிருக்கிறது. அது சூரியனைப்போல் காந்தியுள்ளது. அதன் நடுவில் நவரத்னங்கள் நிறைந்ததும் காய்ச்சின தங்கம் போல் மேனியுள்ளதும் சதுரமாயுள்ளதும் பலவகை ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டதும், பவழ மயமானதும், ஸ்படிக மயமானதுமான நூறு ஸ்தம்பங்களுள்ளதும், சூரியனைப்போல் தேஜஸ்ஸுள்ளதும், மேல் கட்டுள்ளதும், முத்து மாலைகள் தொங்கவிடப் பட்டிருப்பதும், அழகிய கொடிகளும் பதாகைகளும் நாட்டப்பட்டிருக்கிறதும், மல்லிகை முல்லை பாரிஜாதம் தாழம் சம்பங்கி முதலிய ஸுவாஸனை புஷ்பங்கள் பூர்ணமானதும், பெரும் கிளைகளால் பிரகாசிக்கும் கல்ப விருக்ஷத்தின் நடுவிலுள்ளதுமான நவரத்ன மண்டபத்தில் திவ்யமான ஸுவர்ணத் தாமரையின் மீது வீற்றிருப்பவரும், ஸிம்ஹாஸனத்தில் ஏறியிருப்பவரும், கோடி சூரியனைப்போல் காந்தியுள்ளவரும், நான்கு புஜங்களுள்ளவரும், ஸ்ரீ தேவி பூதேவி இவர்களால் பாரிசுவத்தில் பிரகாசிப்பவரும், கிரீடம் ஹாரங்கள் ஆபரணங்கள் இவைகளால் அலங்கரிக்கப் பட்டவரும், மங்களமான சொரூபமுள்ளவரும் அரிஞாணம் யக்ஞோபவீதம் பாதஸரம் இவைகளை அணிந்து சோபிப்பவரும், ஸ்ரீ வத்ஸம் வைஜயந்தி வனமாலை இவைகளைக்கொண்டவரும், துளசி மாலையைப் பூஷணமாகக் கொண்டவரும், பலவகை திவ்ய ஆபரணங்களை தரித்திருப்பவரும், வரத ஹஸ்தம் அபய ஹஸ்தம் சங்கம் சக்ரம் தரித்த ஹஸ்தங்கள் ஆகிய நான்கு புஜங்களுள்ளவரும், பீதாம்பரத்தை உடுத்தவரும் பிரஸன்னமான முகமுள்ளவரும், மங்களகரமானவரும், மனோஹரமான ரூபமுள்ளவரும், கருணை மூர்த்தியாயிருப்பவரும், புன்சிரிப்புள்ள முகாரவிந்தமுள்ளவரும், அணிமாதி அஷ்டைசுவரியங்களும் மூர்த்தி மான்களாய் இருந்து அவைகளால் சமீபத்தில் சேவிக்கப்பட்டவராயும், அஞ்சலி பந்தம் செய்துகொண்டிருக்கும் பிரம்ம ருத்திராதி ஸமஸ்த தேவர்களால் சூழப்பட்டவராயும் கானம் செய்தவரும் நாரதாதிகளாலும் ஸனகாதி யோகிகளாலும் ஸேவிக்கப்பட்டவரும், ஸூதமாகத பந்திகளால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவரும், பரம கல்யாணமாய் இருப்பவரும், சப்திக்கும் கங்கணங்களால்



சோபிப்பவரும், அழகான இருஸ்திரீகள் ஸ்வர்ண தண்டமுள்ள விசித்ரமான சாமரங்கள் போட அதனால் சோபிப்பவரும், பக்தவத்ஸலரும், ஈசுவரனும், பரமாத்மாவுமான ஸ்ரீமன் நாராயணனை ஹிருதயத்திலோ சூரிய மண்டலத்திலோ தியானித்து ஜபிக்க வேண்டும்.

சூரியனிடம் இருப்பவர் நாராயணர் என்பதை ஸ்ரீ பகவத் பாதாளால் ஐதரேய பாஷியத்தில் விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஐதரேயத்தில் காணப்படுவதாவது:— ஏஷ இமம் லோகம் அப்யார்சத் புருஷரூபேண ய ஏஷதபதி ப்ராணோவாவ ததப்யார்சத் ப்ராணோஹ்யேஷ ய ஏஷ தபதி. இதன் அர்த்தமாவது ஏஷ: இந்த பரமேச்வரரான நாராயணர் மகாலட்சுமியுடனும் வாயுபகவானுடனும் கூடி இமம் லோகம் ப்ரம்மாதி ப்ராணிகளின் சரீரங்களை புருஷ ரூபேண அந்தர்யாமி ரூபத்துடன் அப்யார்சத் ப்ரவேசம் செய்தார். அவர் யாரெனில் ய ஏஷதபதி யார் சூரிய மண்டலத்திலுள்ள சூரியனிடத்திலிருந்து மூவுலகத்தையும் ப்ரகாசப்படுத்துகிறாரோ அவர். அவர்தான் யாரென்றால் ப்ராணோவாவ அவர் உத்தமப்ராணரென்று பிரசித்தரான பகவான் நாராயணர்தான். ப்ராணன் என்பவர் நாராயணரே. அவர்தான் பிரம்மாதி சரீர சமூகங்களை ப்ரவேசித்தார்.

இவ்வாறு அர்த்தம் செய்யப்படுவதற்கு ஸ்ரீ பகவத் பாதாள் தம் பாஷியத்தில் சொல்லும் வாதமாவது;— ஏஷ: என்றால் இங்கு நாராயணர்தான். அவர்தான் வாயுவோடு இந்த உலகத்தைப்ரவேசித்தார். உலகமென்றால் ப்ரம்மாதி சரீரங்கள். அவைகளில் புருஷரூபத்துடன் ப்ரவேசித்தார். புரிசேதே இதி புருஷ: என்ற வ்யுத்பத்தியின் பேரில் புருஷன் என்று அந்தர்யாமி ரூபத்திற்குப்பெயர். பாஞ்சராத்திரத்தில் இவ்வாறு பெருவாரியாய் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. சூரிய மண்டலத்திலிருந்து ப்ரகாசிப்பவன் பகவான் நாராயணர்தான். எப்படியெனில் பிருஹதாரண்யத்தில் ''ய ஆதித்யே திஷ்டன்னாதித்யாத் அந்தரோ யமாதித்யோ ந வேத யஸ்யாதித்ய சரீரம் ய ஆதித்ய மந்தரோயமயதி'' என்ற சூரியனிடம் பிரவேசித்து அவனிடம் அவனுக்கு பரமப்ரியனாய் அவனிடமிருந்து தனியாய் இருப்பவராய், எந்த சூரியன் அவரை ஸம்பூர்ணமாய் அறிவதில்லையோ எந்த சூரியன் அவருக்கு சரீரம் போல் சுவாதீனனோ எந்த சூரியனின் எல்லா காரியங்களுக்கும் நியாமகனோ என்று இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் சூரிய மண்டலத்தில் சூரியனைவிட தனியான வேறொருவர் இருப்பதாய் தெரியவருகிறது. இதனால் அவர் நாராயணராய்த்தான் இருக்கவேண்டும்; ஏன் பரமசிவன் இருக்கக்கூடாது; அவருடைய அஷ்ட மூர்த்தியிலொன்று சூரியனிடம்

சொல்லப்பட்டிருக்கிறதே அதனால் சிவனென்றிருக்கலாமே என்றால் மற்றொரு சுருதியில் ''யஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோத்ருச்யதே'' என்று சொல்லி, யதாகப்யாஸம் புண்டரீகமேவாக்ஷிணீ என்று அவருடைய லக்ஷணமும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது சூரியனிடம் ஸுவர்ணமேனியுள்ள புருஷர் இருந்துவருகிறார். அவருடைய கண்கள் அப்பொழுதே மலர்ந்த கமலம் போலிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பரமசிவனுக்கு விரூபாக்ஷன் என்று பிரசித்தி. புண்டரீகாக்ஷன் என்று பகவான் நாராயணனுக்குதான் பிரசித்தியானதால் சூரியனிடமிருப்பவர் நாராயணர் தான் என்று நிச்சயமாகிறது. விரூபாக்ஷன் சூரியனுமாதலால் சூரியனே ஏன் இருக்கலாகாதென்றால் யமாதித்யோநவேத அந்த சூரியனிடமுள்ளவரை அந்தசூரியனே ஸம்பூர்ணமாய் அறியமாட்டானென்று அதே சுருதியில் சொல்லப்பட்டிருப்பதைக்கொண்டு, சூரியனென்று எண்ணுவதற்கில்லை சூரியனும் விஷ்ணுவும் ஒன்று என்று சொல்லிவிடவும் முடியாது. ஓம் பேதவ்யபதேச்சான்ய: என்று ஸ்ரீ வேதவியாஸர் கூறியுள்ளார். அதாவது ''அந்ராதித்மேயனஸாசரந்தம் தேவனும் ஹிருதயம் ப்ரம்மான்வவிந்தத்'' முதலான பேதச்சொல்லால் பிரசித்தமான சூரியனைவிட வேறானவர்தான் விஷ்ணு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ''விருத்ரம் யதந்திர சவசாவதீ:'' என்ற சுருதியில் பரமைசுவரியமுள்ள பகவன்! பிரயாசையன்னியில் விருத்ரனை நீ கொன்றதன் நிமித்தம் தரிசனத்திற்காக சூரியனை ஸ்வர்க்கத்தில் வைத்தாய். அதனால் திக்குகளில் விழுவதும் முன்னடி விழுவதும் மேலே விழுவதுமான சூரியனுடைய கிரணங்களைக் ஞானத்திற்காக ஏற்படுத்தினீர். இந்திரனுடைய வயிற்றிலிருந்து வரும் தாம் சூரியனைத் த்யோலோகத்தில் ஏற்றி வைத்ததால் ஜனங்கள் ஞானத்தை அடைந்ததுமின்றி கர்மாக்களையும் செய்யும்படி செய்தீர் யார் சூரியனை சிருஷ்டி செய்தாரோ அவர் பரமைசுவரியம் படைத்த நாராயணர். யார் ஜனங்களை சிருஷ்டி செய்தவரோ, யார் ஞானானந்தமுள்ளவரோ அவர் சூரியனுக்கு ஆசிரயமாயிருப்பவர். அவரால் உலகத்திற்கு ஞானத்தைத் தருகிறவனாய் சூரியன் உதயமாகிறான். பகவானால் வெளியில் வியாப்தமாயுள்ள ஸ்வர்க்கத்தையும் பூமியையும் யாருடைய ப்ரேரணையின் பேரில் தன் காந்தியால் பிரகாசப்படுத்துகிறானோ அவர் நாராயணர் என்று இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு சொல்லப்பட்டிருப்பவர் நாராயணர் தான் என்பதற்கு அவர் ஸமுத்திரத்தில் இருப்பவரென்று ஞானிகள் அறிந்திருக்கின்றனரென்றும் முன்னடி அதே சுருதியில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஸமுத்திரத்தில் இருப்பவரென்பது நாராயணருக்குத்தான் உரியது என்பது பிரஸித்தம். இவ்வாறு சுருதிகள் இருப்பதுமன்றி ஸ்மிருதியிலும் மேற்கண்ட த்யேய: ஸதா ஸவித்ரு மண்டல மத்யவர்த்தீ என்று நரஸிம்ஹ புராணவசனமும் இருந்துவருகிறது.

(தொடரும்.)



ஸ்ரீ நாராயணபண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீ மத்வ விஜயம்.

## ஆறுவது ஸர்க்கம்.

(முன் 7வது வாலியம் 364ம் பக்கம் தொடர்ச்சி.)

(1) அந்த பயஸ்வினி தீரத்திய தேவாலயத்தில் கூடிய அந்த பண்டித ஸபையில் ஓர் தலைவர் ஐதரேயசாகையிலுள்ள ரிக் வேதத்தின் ஓர் ஸூக்தத்தின் துவக்கத்தை எடுத்துச்சொல்லி அதன் தாத்பரியத்தை பூஜ்யரான தங்கள் முகத்தினின்றும் சிரவணம் செய்ய இந்த சபையார் விரும்புகின்றனர் என்று அறிவித்தார். (2) பயமற்றவரான ஸ்ரீ மத்வாசாரியார் இதைக்கேட்டு முதலில் அந்த ஸூக்தத்தின் அக்ஷரங்களை ஸ்பஷ்டமாய்ச்சொல்லி உத்தமமான ரீதியில் வேகமாய் இல்லாமல் மாத்திரைகளெல்லாம் ஸமானமாய் இருக்கும்படி அழகான லக்ஷணங்களுடன் மேகத்தின் முழக்கம் போன்ற கம்பீரமான குரலில் ஸூக்தத்தைச் சொல்லிவிட்டு, அதன் அர்த்தத்தை எடுத்துச்சொன்னார். (3) வேதத்தைச்சொல்ல அவசியமான வேதோச்சார லக்ஷணங்களுடன் இந்த ஸூக்தத்தைச்சொல்லி, அதன் அர்த்தத்தை விளக்கிக்காட்டியதில் இவர் தேவகுருவான பிருஹஸ்பதியை மீறி இருக்கிறார்தான் என்று ஸ்ரீ மத்வாசாரியாரை மனதில் கொண்டாடினார்களாயினும் அவர் சொன்ன அர்த்தத்தை விட்டு வேறு அர்த்தத்தை அந்த ஸூக்தத்திற்கு அச்சபையோர் சொன்னார்கள். (4) இதைக்கேட்டு ஸ்ரீ மத்வாசாரியார் சபையோரே! இந்த ஸூக்தத்திற்கு நாம் சொன்ன அர்த்தமும் பொருந்தும். நீங்கள் சொன்ன அர்த்தமும் பொருந்தும். இரண்டும் ப்ராமாணிகம் தான். ஏனெனில் வேதங்களுக்கு மூன்று அர்த்தம் உண்டு என்று தெரிந்துகொள்ளுங்கள். மகாபாரதத்திற்கு நூறு அர்த்தம் உண்டு. விஷ்ணு ஸஹஸ்ர நாமங்களில் ஒவ்வொரு நாமாவுக்கும் நூறு அர்த்தம் உண்டு. ''த்ரயோர்த்தா: ஸர்வ வேதேஷு தசார்த்தா: ஸர்வ பாரதே] விஷ்ணோ: ஸஹஸ்ர நாம்னோபி நிரந்தரசத

ர்த்தகம்'' என்று இது ப்ரமாண ப்ரஸித்தம். (5) இவ்வாறு பூர்ணப்ரக்ஞரான ஸ்ரீ மத்வாசாரியார் சொல்லவும் அச்சபையிலுள்ள பிராம்மணர்கள் இந்த ஸூக்தார்த்தத்தைச் சொன்னதில் அவரை ஜயித்துவிட விருப்பங்கொண்டவர்களாய் தாங்கள் சொன்னபடி தங்கள் அர்த்தமும் இந்த ஸூக்தத்திற்கு பொருந்தி வேதத்திற்கு மூன்று அர்த்தம் உண்டென்றால் விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திலுள்ள விச்வம் முதலான ஒவ்வொரு நாமாவுக்கும் உங்கள் பிரமாண வாக்யத்தின்படி நூறு அர்த்தம் இருக்கவேண்டுமல்லவா? அப்படியானால் விச்வாதி நாமாக்களுக்குள்ள அந்த நூறு அர்த்தங்களை இப்போது சொல்லுங்கள். கேட்போம். என்று, ஸ்ரீ மத்வாசாரியார் இதைச் சொல்லமுடியாமல் தோற்று போவார் என்னும் எண்ணத்தின்பேரில் சிரித்த முகத்துடன் சொன்னார்கள். (6) பிராம்மணோத்தமர்களே! அப்படியே அந்த நூறு அர்த்தங்களையும் உங்களுக்காக ஒன்றின் பின்னொன்றாய் எடுத்துச்சொல்லுகிறேன். நீங்கள் மட்டில் அவைகளை நான் சொன்னபடியே அந்த அர்த்தங்களை மனதில் கிரஹித்து ஸ்பஷ்டமாய் பிறகு திருப்பிச்சொல்லவேண்டும். அது உங்களால் முடியுமா? சொல்லுங்கள் என்று ஸ்ரீ மத்வாசாரியார் சொல்லவும் எல்லோரும் சேர்ந்து சரி அப்படியே நாம் திருப்பிச்சொல்லுகிறோம் என்று ஒப்புக்கொண்டு அவ்வாறு திருப்பிச்சொல்ல திடமான எத்தனங்கொண்டனர். (7) சம்சயமற்ற ப்ரக்ஞையுள்ள ஸ்ரீ மத்வாசாரியார் சப்தசாஸ்திரமான வியாகரணத்தில் சொன்னபடி அந்த தாதுவின் சப்தஸ்வரூபமாகிய ப்ரகிருதியும் பின்னடி சேர்க்கப்படும் ப்ரத்யயமும் ஸம்பந்தமடைந்த ப்ரகார விசேஷங்களை நிரூபித்துக்காட்டி அதனால் ஏற்பட்டதாயுள்ளதும் உபநிஷத்துகளில் ஸித்தமாயுள்ளதுமான முதல் நாமாவான விச்வம் என்னும் நாமத்தின் நூறு அர்த்தத்தையும் உடனே தவக்கமின்றி எடுத்துச்சொன்னார். (9) ஆறு அங்கங்களுடன் கூடிய வேதங்களில் நிபுணர்களாயினும், பாரதாதி இதிஹாஸங்களிலும் ஸமஸ்தமான சாஸ்திரங்களிலும் மகா பண்டிதர்களாயினும், அப்பேர்ப்பட்டவர்கள் அநேகர் சேர்ந்திருப்பினும், மிக்க தைரியசாலிகளாயிருப்பினும், ஸ்ரீ மத்வாசாரியார் சொல்லிவந்த அர்த்தங்களை



அறியமுடியாமற்போனது மிக்க ஆச்சரியமாயிருந்தது. ஸ்ரீ மத்வாசாரியாரின் பாண்டித்யம் வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதது ப்ரளய காலத்திய ஜலப்ரவாகத்தை ஜகத்திலுள்ள எல்லா கிணறுகளும் சேர்ந்தாலும் கிரஹித்துக்கொள்ள எப்படி முடியாமற்போகுமோ அப்படி பண்டிதர்கள் எல்லோரும் சேர்ந்தும் கூட, அந்த அர்த்தத்தை கிரஹிக்க முடியவில்லை. (10) ஸர்வக்ஞரே! தங்கள் ஞானம் தேவர்களிலும் ஸுலபமாய் இருக்கக்கூடியதல்ல. அப்படியிருக்க சஞ்சல சித்தர்களான மனுஷ்யர்களில் இந்த தங்கள்க்ஞானம் காணப்படாது என்று சொல்லவும் வேண்டுமோ? சுந்தர புருஷனே! நாம் செய்த இந்த ஸாஹஸத்தை மன்னிக்க வேண்டும். உங்களுக்கு நமஸ்காரம் என்று சொல்லிக்கொண்டு எல்லோரும் ஏகோபித்து அச்சபையில் ஸாஷ்டாங்கம் நமஸ்கரித்தனர். (11) பிறகு அவ்வூரை விட்டு ஸ்ரீ மத்வாசாரியார் அந்த பயஸ்வினி நதி தீரத்திலேயுள்ள மற்றொரு தேவாலயத்திற்குச் செல்லவும் அங்கு வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் கேரளதேசத்து அவ்வூரிலுள்ள எல்லா பண்டிதர்களும் தம் தம் வித்யாசாமர்த்தியத்தைக் காட்டி ஸ்ரீ மத்வாசாரியாரிடமிருந்து சம்பாவனைகளைப்பெற வந்து குவிழ்ந்தனர். (12-13) தர்கசாஸ்திரமென்ன வேதாந்த சாஸ்திரமென்ன இவைகளில் பாண்டித்யமுள்ளவர்களையும் அப்படியே வைசேஷிகமதம் பாட்டமதம் இவைகளில் நிபுணர்களையும் தோற்கடித்து அவர்களின் மானத்தையும் இந்த மத்வாசாரியார் செவ்வனே போக்குகிறார். அப்படியிருக்க இங்கு கூடியிருக்கும் இந்த அசேஷ கேரளதேசத்து பண்டிதர்களின் வித்யா கர்வத்தை ஏன் போக்கடிக்க மாட்டார் என்று எல்லோரும் கலந்து யோசித்து ஒருவர் தோற்றுப்போனாலும் கேரள தேசம் பூராவுக்குமே அவமானமென்றெண்ணி வேறு தேசத்திய பண்டிதன் ஒருவன் மூலமாய், ஸ்ரீ மத்வாசாரியாரின் ஸமீபம்வந்து ஸத்பாத்ரத்தில் தானம் செய்பவனை துதிப்பதாயும் தானம் செய்யாதவனை தூஷிப்பதாயுமுள்ள நவா உ-தேவா: என்னும் ஸூக்த மந்திரத்தின் அர்த்தத்தை ப்ரச்னம் செய்தனர். (14) அப்பொழுது ஸ்ரீ மத்வாசாரியார் அவ்வாறே அந்த மந்திரத்தின் அர்த்தத்தைத் தெளிவாய் எடுத்துச்சொல்

னும்பொழுது அந்த மந்திரத்திலுள்ள ப்ருணீயாத் என்னும் சப்தத்திற்கு மூலம் அதாவது ப்ரகிருதியானது தானம் என்னும் அர்த்தங்கொண்ட ப்ருணதாது என்று சொல்லவும், ப்ரச்னம் செய்தவனை அந்த அயல் நாட்டு பண்டிதன் ஸ்ரீமத்வாசாரியாரை ஜயித்துவிட வேண்டுமென்ற விருப்பத்துடன் ப்ரீஞ் ப்ரீணனே என்று அர்த்தங்கொண்ட ப்ரீஞ் தாதுவே ஆகுமென்று சொல்லவும் அந்த பண்டிதனைப்பார்த்து ஸ்ரீமத்வாசாரியார் இவ்வாறு பேசினார். (15) ஹே மூடனே! ப்ருணீயாத் என்ற வார்த்தையில் முதல் எழுத்து ப்ரு என்பது. இதை முதலெழுத்தாய்க் கொண்டது ப்ருண என்னும் தாது. நீர் சொல்லும் ப்ரீஞ் என்னும் தாதுவில் முதல் எழுத்து ப்ரீ என்பது, ஆகவே ப்ரு, ப்ரீ என்னும் இரண்டு எழுத்துக்களில் ப்ரு என்பது இன்னதென்றும் ப்ரீ என்பது இன்னதென்றும் வித்தியாஸத்தை அறியாத நீர் புழுதியின்மீது எழுத்துக்களை எழுதி எழுதி உருப்போட்டு அக்ஷராப்யாசம் செய்துகொள்ளும்; போம் என்று அந்த பண்டிதனை திக்காரம் செய்துவிட்டு, அழகிய சிரிப்புள்ள அந்த மத்வாசாரியார் பொறுமை கொண்டிருந்த அந்த கேரள தேசத்திய பண்டிதர்களை எல்லாம் பதிலொன்றும் சொல்ல முடியாமல் திகைக்கும்படிசெய்து சிரித்தார். (16) இவ்வாறு ஸ்ரீ மத்வாசாரியார் அந்த பிராம்மண மகாசபையில் செய்த உபந்யாஸத்தின் மூலமாய் எல்லா சாஸ்திரங்களிலுமுள்ள அவருடைய கல்வியின் திறத்தை அந்த கேரள பண்டிதர்களெல்லோரும் நன்கறிந்து ஸ்ரீமத்வாசாரியாரிடம் மிக்க மதிப்புகொண்டு எல்லோரும் சாஷ்டாங்கம் நமஸ்கரித்தனர். ருத்திரேந்திராதி தேவ ஸமூகங்களே இவரை நமஸ்கரிக்கும்பொழுது அந்த பயஸ்வனி நதிதீரவாஸிகளான அந்த கேரள பண்டிதர்கள் நமஸ்கரித்தது ஆச்சரியமன்று. (17) ஓர் கன்னிகையால் சந்தோஷிக்கப்பட்ட, மகேந்திரன் அந்த கன்னிகையின் சரீரத்துக்கு சூரியனைப்போன்ற திவ்ய காந்தியைக்கொடுத்தார் என்று அறிவிக்கும் "கன்யா வாரவாயதி" என்னும் உத்தமமான சூக்தத்தின் அர்த்தத்தை ஸ்ரீ மத்வாசாரியார் மற்றொரு ஊரில் ஓர் சபையில் எடுத்துச்சொல்லும் பொழுது அந்த சூக்தத்திலுள்ள "அபாலாமிந்த்ரத்ரிஷ்பூத்வயக்ருணோ: ஸூர்யத்வசம்" என்னும் ரிக்கிலுள்ள அபாலா என்னும் வார்த்தைக்கு அதிதருணீ நல்ல யௌவனமுள்ளவள் என்று அர்த்தம் சொன்னார்.

(தொடரும்.)



# ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் 7வது வாலியம் 359ம் பக்கம் தொடர்ச்சி,)

அவருடைய பார்ஷதர்கள் உ ானுடன் இருந்து யுத்தம் செய்து உன் சத்ருசைன்யத்தை கொல்லப்போகின்றனர். உன் ராஜ்யம் உனக்கு ஸ்வாதீனமாகப்போகிறது. யாதொன்றுக்கும் பயப்படாதே! என்வார்த்தையில் விசுவாசம் வைத்து தைரியமாய் உன் சத்ரு சைனியத்தில் பிரவேசம் செய். என் மந்திராக்ஷதைகளை மட்டில் ஜாக்கிரதையாய் வைத்துக்கொள், என்று சொல்லவும் அரசன் ஸ்ரீ வாதிராஜரின் தபோமகிமையில் மிக்க நம்பிக்கைகொண்டிருந்தானாதலால் ஒவ்வொரு கொடியிலும் அவருடைய பாதஸ்மரணை செய்துகொண்டு, ஸதா ஸர்வதா அவருடைய நாமாவை உச்சரித்துக்கொண்டு, தைரியமாய் அவனுடைய நகரத்தின் வெளிவாசல் சமீபம்போய் நகரத்தினுள்ளே பிரவேசிக்கும்பொழுது, தனக்கு முன்னே சக்ரம் சங்கம் முதலான பஞ்சாயுதங்களை தரித்த பல்லாயிரக்கணக்கான குதிரைப்படைகள் தனக்கு ஸஹாயமாய் போவதைக்கண்டான். ஆச்சரியப்பட்டு இது கனவோ அல்லது நினைவோ என்று கண்களைத்துடைத்துப் பார்க்கவும் எல்லாம் உடனே மறைந்தது. இதில் ஏதோ சமத்காரமிருக்கவேண்டும். ஸ்ரீ வாராதிஜரின் மகிமை அபாரமானது. ஈசனின் அனுக்ரஹம் தன்னிடம் ஏற்பட்டுவிட்டது உண்மை என்று மனதை திடப்படுத்திக்கொண்டு உறுவின கத்தியுடன் ஓர் குதிரையின் மீதேறி தன் பட்டாளமுள்ள இடத்திற்குச் செல்ல, எல்லா போர்வீரர்களும் உடனே ஓடிவந்து பணிந்து அவனுக்கு ஸகாயம் செய்வதாய் சொல்லி யுத்தத்திற்கு தன்னுடன் கூட வந்து சேரவும், அரசன் சத்ருராஜனுடன் சிறிது யுத்தம் செய்யும் பொழுதே அவனுடைய சைனியங்களெல்லாம் சின்னாபின்னமாய்ப் போய் மடிந்துபோயின. சத்ரு ராஜனும் தன் உயிர் தப்ப மாறு வேடம் பூண்டு பறந்தோடிப்போனான். அரசன் தன் கைவசத்திலிருந்து தவறிய போயிருந்த ஸோதா ராஜயம் மீண்டும் கைக்கு கிடைத்ததற்கு மிகவும் சந்தோஷமடைந்தான். ஆனந்தமாய் தன் அரண்மனைக்குள் பிரவேசித்தான். சிம்ஹாஸனத்தில் அமர்ந்தான். ஓர் பெரிய சபையைக்கூட்டினான். ஸபையின் நடுவில் பஹிரங்கமாய், தன் ஆபத்தை தீர்த்து தனக்கு பரயானுக்ரஹம் செய்த மகா யோகீஸ்வரரை தான் அந்நகருக்கு அழைத்துவரப் போவதால் பட்டணமெங்கும் அலங்காரம் செய்யப்பட்டு ஒவ்வொருவரும் மிக்க மரியாதையைக்காட்டி அவரு

னுடைய அனுக்ரஹம் பெறவேண்டுமென்று சொல்லி ஆக்ஞையிட்டான். பெரியதொரு தங்கப்பல்லக்குடன் சதுரங்க சைனியத்தை அழைத்துக்கொண்டு ஸ்ரீ வாதிராஜர் தபம் செய்திருந்த அந்த வனத்தின் மத்தியத்திற்கு வந்து சேர்ந்தான். சாஷ்டாங்கம் அவருடைய பாதத்தில் பன்முறை நமஸ்கரித்தான். மகா ஸ்தோத்திரம் செய்தான். மஹானே! தங்கள் திருவருளால் என் சங்கடங்களெல்லாம் நீங்கியது. போன ராஜ்யம் கிடைத்தது. சத்ருக்கள் பறந்தோடிப்போயினர். நான் முன்போல் ராஜ்யத்தை ஒப்புக் கொண்டுவிட்டேன். எனக்கு இத்தனை வைபவங்களையும் தந்தருளிய தங்கள் பாததூளிகள் என் அரண்மனைக்குள்ளே விழவேண்டும். என் பவனம் பவித்ரமாக வேண்டும், என் தீவினைகள் தீரவேண்டும்; என் சங்கடங்கள் ஒழியவேண்டும்; எனக்கு நற்கதி ஏற்பட உபதேசம் செய்யவேண்டும். தங்கள் அனுக்ரஹத்திற்கு பாத்திரமாய் தங்கள் தாஸானுதாஸனை அடியேனுடைய இந்த பிரார்த்தனைக்கு இணங்கி இந்த பல்லக்கிலேறி என் ராஜ்யத்துக்கு விஜயம் செய்யவேண்டும் என்று வெகுவாய் பிரார்த்தித்தான். ஸ்ரீ வாதிராஜர் அவனுடைய பக்தியைக்கண்டு மிகவும் மெச்சி அந்த தங்கப்பல்லக்கிலேறி, அரசன் சதுரங்க சைனியத்துடன் கால் நடையாய் முன்னே போகவும், ஸமஸ்த ராஜ வைபவங்களுடன் ஸோதாபுர பட்டணம் பிரவேசம் செய்து ராஜ வீதிகள் வழியாய் ஊர்வலம் வந்து பட்டணத்து ஜனங்களால் பணியப்பட்டவராய் அரசனின் அரண்மனைக்குள் ப்ரவேசம் செய்து சபையில் உத்தமமான ஆஸனத்தில் அமர்ந்தார். பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் நமஸ்கரித்து சபையில் அமரவும் ஸ்ரீ வாதிராஜர் மிகவும் சந்தோஷப்பட்டு அரசனே! உம்முடைய பக்தியைக்கண்டு மெச்சினேன். இனி நீர் என்னைச்சேர்ந்தவராய் ஆகிவிட்டீர். உம்முடைய க்ஷேமலாபத்தை நாம் கவனிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. அரசனே! உம்முடைய குருவைப்பார்க்க விரும்புகிறேன். அவருடன் பேசி அவருடைய சித்தாந்தத்தை பரீக்ஷித்தறிய விரும்புகிறேன். இப்பொழுதே இங்கு எல்லோரும் கூடியிருக்கையிலேயே அவரை வரவழையும் என்று சொல்லவும், ராஜன் குருவுக்கு உடனே அவரை வரும்படி செய்தி சொல்லி அனுப்ப, குருவும் கைலாஸம் சென்று பரமசிவனை தரிசித்துவிட்டு ஒரு முகூர்த்தத்தில் வந்து விடுவதாய்ச் சொல்லிஅனுப்பவும், எல்லோரும் அவருடைய வரவை எதிர்பார்த்திருக்கும்பொழுது, எப்பொழுதும்போல் ஆகாயத்திலிருந்து உயர வெகுதூரத்திலிருந்து, இறங்கி வருவதைப் போல் காட்டிக்கொடுத்து சபையின் நடுவில் இறங்க அந்தரத்திலிருந்து வருவதை எல்லோரும் ஆச்சரியத்துடன் கண்டனர். இதைப் பார்த்தி-



ருந்த ஸ்ரீ வாதிராஜர் உடனே சிரித்துக்கொண்டு, தன் மந்திரசக்தியால் அவனுடைய இந்திரஜால வித்தையை நாசமாகச்செய்து விடவும் அவனுடைய சாமர்த்தியம் பக்னமடைந்து எல்லோரும் பார்க்கையில் மேலே வெகு தூரத்திலிருந்து தடாலென்று பூமியில் விழுந்தான் எல்லோரும் சிரிப்பு அடக்கமுடியாமல் வயிறு குலுங்க சிறித்தனர்: குருவும் மிக்க அவமானமடைந்தான். இதற்கு காரணமென்னவென்று நாற்புறமும் பார்த்தான் தேஜ: புஞ்ஜராய் ஸௌம்யஸ்வரூபத்துடன் விளங்கும் மகாரூபவானான அந்த யதீசுவரரைக்கண்டு பயந்துபோய் இவரால் தான் தன் மாயை நாசமாக்கப்பட்டிருப்பதாய் நிச்சயித்து இன்றுடன் தன் வாழ்நாள் முடியப்போவதாயும் தன் வஞ்சனைகள் மடியப்போவதாயும் உறுதி கொண்டான். ஆயினும் தான் பயந்துபோனதை வெளியில் காட்டிக்கொடுக்காமல் தைரியமாய் எப்போதும் போல் அரசனின் சமீபத்தில் உயர்ந்த ஆஸனத்தின்மீது உட்கார்ந்தான். அரசன் எப்போதும்போல் அவருக்கு மரியாதைகாட்டி "சபையோர்களே! இன்று இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகளென்னும் பெரியார் என் குருவுடன் வாதமாடி தன் ஸித்தாந்தத்தை ஸ்தாபிக்கத் தயாராயிருப்பதாய் அறிவித்திருக்கிறார். அதற்கு எமது குருவும் இணங்கி இப்பொழுது தயாராய் இருப்பதாய் நான் நம்புகிறேன். வாதம் துவக்குவதற்குமுன் என்ன ஏற்பாடுகள் ஆகவேண்டுமோ அவைகளைச்செய்ய நான் தயாராயிருக்கிறேன் என்பதை பணிவுடன் இம்மகனீயர்களுக்கு அறிவிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு மௌனமானான். உடனே ஸ்ரீ வாதிராஜர் புன்சிரிப்புடன் "நியாயத்தை நன்கு அறிந்து தீர்மானம் செய்யக்கூடிய வல்லமை படைத்த அரசனே; சபையோர்களே! என் வார்த்தையை நீங்கள் கவனமாய் கேட்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கு அரசனின் சமீபத்தில் உயர்ந்த ஆஸனத்தில் மிக்க கர்வத்துடன் உட்கார்ந்திருக்கும் இந்த ராஜகுரு எங்கள் பிராம்மண சமூகத்திற்கே பெரிய சத்ருவாவார். பிராம்மணர்களை ஹிம்ஸிப்பதே தொழிலாகக் கொண்டவரென்பதை நான் சொல்லத்தேவையில்லை. இந்திரஜால வித்தையை கைபிடித்து உங்கள் எல்லோரையும் வஞ்சித்துக்கொண்டு, தான் தினமும் கைலாஸம் போவதாயும் பரமசிவன் ஆக்ஞைப்படி நடந்து வருகிறாரென்றும் பொய்யான வார்த்தைகளைப்பேசிக்கொண்டு அரசனை தகாத வழியில் பிரவிருத்தித்து தன் காரியத்தால் அரசனுக்கு பலவகை சங்கடங்களை உண்டாக்கி வருகிறார். இவர் அந்தரத்தில் இறங்கிவந்து கொண்டிருந்தது இந்திர ஜாலவித்தையால் என்பதை இன்று என் எதிரில் அவருடைய வித்தை பலிக்காமல் போய் உயரத்திலிருந்து அவர் கீழே விழுந்ததாலேயே நீங்கள் நிச்சயம் செய்துகொள்ளலாம்.

(தொடரும்).

# அப்பைய்ய தீக்ஷிதரின் அதிக்ஷேபணைகளுக்கு கண்டனம்.

(முன் 7-வது வாலியம் 365-ம் பக்கம் தொடர்ச்சி).

பெரிய நூல்களை இயற்றியிருப்பதைக்கொண்டு அவர்களை ஸர்வக்ஞர்களென்று நீங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாயிருந்தால் எங்கள் ஆசாரியாரும் அப்பேர்ப்பட்ட கிரந்தங்களைச் செய்திருப்பதால் அவரை ஸர்வக்ஞரென்று ஏன் நீங்கள் ஏற்றுக்கொள்ளலாகாது? எங்கள் கிரந்தங்களைப்போல உங்கள் கிரந்தங்கள் தத்வக்ஞானத்திற்கு ஏற்பட்டவைகளல்லவென்றும் மோகமூலம் என்றும் நீங்கள் கக்ஷி பேசினால், அது எவ்வாறு உங்களுக்குத் தெரிந்ததென்று நாம் கேட்போம். உங்கள் சாஸ்திரம் தான் மோகத்திற்காக ஏற்பட்டது என்று புராணாதிகளால் நிச்சயமாகிறது. "மாயாவாதமஸத் சாஸ்திரம் ப்ரச்சன்னம் பௌத்தமுச்யதே। மயைவகதிதம் தேவிகலௌ ப்ராம்மணரூபிணா" மாயாவாதமென்பது அஸத்தான சாஸ்திரம். அது மறைவடைந்த பௌத்தமதம் என்று சொல்லப்படுகிறது. நான் தான் கலியுகத்தில் ப்ராம்மணரூபமெடுத்து பார்வதியே அதைச்சொல்லியிருக்கிறேன் என்று பாத்ம புராணம் கூறுகிறது. நீர் உதாஹரித்திருக்கும் "சதுர்பி: ஸஹசிஷ்யைஸ்ச சங்கரோவதரிஷ்யதி। ஸஹஸ்ரேத்வி சதேதத்தரே। நான்கு சிஷ்யர்களுடன் பரமசிவன் அவதரிக்கப்போகிறார் என்னும் வசனமும் கேவலம் ஆசை வார்த்தையாயிருந்தாலும் இந்த அர்த்தத்திற்கு ஒத்ததாகவே இருக்கிறது. இதைக்கொண்டு மட்டில் உங்கள் மதத்தை ஞானிகள் ஏற்றுக்கொள்ளத் தகுந்ததாயில்லை. ஏனெனில் எங்கள் கிரந்தங்கள் புறப்பட்டதற்கு பிரயோஜனம் சிஷ்யர்களை அனுக்ரஹிப்பதற்காகவென்றும் உங்கள் மதம் மோகசாஸ்திரமென்றும் புராணங்களில் ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—

கூர்மபுராணம் ஸ்ரீ முஷ்ணமகாத்மியம் ஐந்தாவது அத்யாயத்தில்.— ஸ்ரீஸூதஉவாச। புரா பாகீரதீ தீரே நிமினா பிருஷ்டவான்முனி:। நஷ்டா பாகவதா தர்மா: ஸச்சாஸ்திராணி கலௌயுகே॥ 1 ॥ இதிச்ருதம் மயா பூர்வம் தீர்த்தயாத்ராப்ரஸங்கத:। கதம் நஷ்டா பவிஷ்யந்தி புன: ஸ்தாஸ்யந்திவைகதம்॥ 2 ॥ வதவித்வன் மகாபாஹோ கஸ்சோத்தாரம் கரிஷ்யதி। ஸ்ரீ வாமதேவ உவாச। சதுஸ்ஸஹஸ்ரே த்விசதே கதே ஸௌகந்திகேவனே॥ 3 ॥ நிஹதா பீமசேனேன த்வாபராந்தே நிருபோத்தமா। ஸௌகந்திகாக்யே நிஹதா யே ச க்ரோதவசா: கலா: ॥ 4 ॥ ருத்ரேண நிஹதாயே ச த்ரைபுராஸ்ச கலௌயுகே। சதுஸ்ஸஹஸ்ரே அஷ்டசதே மணிமந்தாதயோஸுரா: ॥ 5 ॥ ஜனிஷ்யந்தி ப்ரம்மயோனௌ தைத்யா: ஸத்தர்மதூஷகா:। மித்யாவாதமஸச்சாஷ்திரம் கரிஷ்யந்திகலௌயுகே। கோபயிஷ்யந்தி ஸச்சாஸ்திரம் ஸச்சாஸ்திர பரிபந்தின:॥ 6 ॥ ஏவம் தர்மேஷு நஷ்டேஷு சாஸ்த்ரேஷு ச கலௌயுகே। தேவைர்விக்ஞாபிதோ விஷ்ணுர் வாயுமாக்ஞாபயிஷ்யதி ॥ 7 ॥ உத்தாரஸ்வ மகாபாஹோ மம தர்மான் ஸநாதனான்। இத்யாக்ஞப்தோ பகவதா கலௌ வாயுர்பவிஷ்யதி ॥ 8 ॥ மத்வநாமாயதிரஸௌ ஸச்சாஸ்த்ராணி கரிஷ்யதி। கீதாயாஸ்சோபநிஷதாம் பாஷ்யாணி ச கரிஷ்யதி ॥ 9 ॥ நிரஸிஷ்யதி பாஷண்டான் ஸச்சாஸ்திராணி மகாமதி:। ஸ்தாபயிஷ்யதி ஸத்தர்மான் ஸச்சாஸ்திரம் வ்யாகரிஷ்யதி ॥ 10 ॥ ச்ரோஷ்யந்தி முனயஸ் ஸர்வே சுகாத்யா தேவரூபிண: ॥ 11 ॥ இதன் பொருளாவது:— ஸ்ரீ ஸூதர் சொல்லுகிறார். முன்பு கங்கா தீரத்தில் நிமிராஜன் வாமதேவ மகரிஷியை இவ்வாறு ப்ரச்னம் செய்தான். தீர்த்த யாத்திரையைச் சொல்லிவரும்பொழுது கலியுகத்தில் பகவத் தர்மங்களும் ஸச்சாஸ்திரங்களும் நாசமடைந்ததாகத்தாம் சொன்னீர். அவைகள் எப்படி நாசமடைந்ததென்றும் மறுபடியும் அவைகள் முன்போல் எப்படி ஸ்தாபிக்கப்பட போகிறதென்றும் அவ்வாறு யார் உத்தாரம் செய்யப்போகிறார் என்பதையும் சொல்லுங்கள் என்று கேட்டதற்கு, வாமதேவர் சொல்லுகிறார். கலியுகத்தில் நாலாயிரத்து இருநூறு வருஷமானபின் முன்பு ஸௌந்திக வனத்தில் த்வாபர யுகத்தின் அந்தத்தில் பீமசேனரால் கொல்லப்பட்டிருந்த க்ரோதவசர்களென்னும் தைத்தியர்களும், ருத்திரனால் கொல்லப்பட்டிருந்த த்ரிபுராஸுரர்களும்,

மணிமந்தன் முதலான அஸுரர்களும் கலியில் 4800வது வருஷத்தில் ஸத்தர்மங்களை கெடுப்பவர்களாய் பிராம்மண குலத்தில் பிறக்கப்போகின்றனர். கலியில் எல்லாம் மித்யை என்றறிவிக்கும் அயோக்யமான சாஸ்திரத்தை செய்யப்போகின்றனர். ஸத்சாஸ்திரங்களுக்கு விரோதிகளாய் ஸத்சாஸ்திரத்தை எல்லாம் மறைக்கப்போகின்றனர். இந்த உபாயங்களால் தர்மங்களெல்லாம் கலியில் நஷ்டமடையவும் தேவர்களால் விக்ஞாபனம் செய்துகொள்ளப்பட்ட நாராயணன் வாயுபகவானை ஆக்ஞாபிக்கப் போகிறார். என்னுடைய ஸநாதன தர்மங்களை நீ பூமியில் அவதரித்து உத்தாரம் செய்யென்று பகவான் நாராயணன் ஆக்ஞாபிக்க வாயுபகவான் மத்வர் என்ற ஸன்யாஸியாய் அவதரிக்கப் போகிறார். ஸச்சாஸ்திரங்களை இயற்றப்போகிறார். பகவத் கீதைக்கும் உபநிஷத்துகளுக்கும் பாஷ்யங்களைச் செய்யப்போகிறார். வேதத்திற்கு விருத்தமாய்ப்பேசும் பாஷண்டிகளைக் நிக்ரஹம் செய்யப்போகிறார். பூர்ண புத்தியுள்ளவராய் ஸச்சாஸ்திரங்களையும் ஸத்தர்மங்களையும் ஸ்தாபிக்கப்போகிறார். ஸச்சாஸ்திரங்களுக்கு வியாக்யானம் செய்யப்போகிறார். தேவதா உருவங்கொண்டவர்களும், சுகாதி எல்லா மகரிஷிகளும் அவருடைய பாடத்தைச் சிரவணம் செய்யப்போகின்றனர் என்று. மேலும் அதே கூர்ம புராணம் அளகாபுரி மகாத்மியத்தில் "கலௌது பாப பூயிஷ்டே மித்யாக்ஞான பராயணா:। தூஷயிஷ்யந்தி ஸத்தர்மான் ஸச்சாஸ்திராணி கலௌபுன:॥ உத்தரிஷ்யதி ஸச்சாஸ்திரம் கஸ்சித் காலாந்தரேயதி:। ராஜத்வாரம் ஸமாச்ருத்ய பாகண்டான் நிரஸிஷ்யதி। வ்யாகரிஷ்யதி ஸச்சாஸ்திரம் தேவப்ராம்மணதர்பக:॥" என்றிவ்வாறு காணப்படுகிறது. அதாவது பாபம் மிகுந்த கலியுகத்தில் மித்யாக்ஞானத்தில் ஈடுபட்டவர்களாய் சாஸ்திர ஸம்மதமான தர்மங்களையும் ஸத்சாஸ்திரங்களையும் கெடுக்கப் போகின்றனர். சிறிது காலத்திற்குப்பின் ஓர் ஸன்யாஸியார் உத்தாரம் செய்யப் போகிறார். அரசனுடைய உதவிபெற்று வேத பாஹ்யமான மதங்களை நிக்ரஹம் செய்யப்போகிறார். தேவப்ராம்மணர்களுக்கு சந்தோஷப்படுத்துகிறவராய் ஸச்சாஸ்திரங்களுக்கு வியாக்யானம் செய்யப்போகிறார் என்று.



மேலும் ஸ்காந்த புராணம் ஸ்ரீ முஷ்ண மகாத்மியம் ஒன்பதாவது அத்யாயத்தில் "கலௌ பாசண்ட பூயிஷ்டே தர்மலேச விவர்ஜிதே ॥ 1 ॥ வைவஸ்வதேந்தரே ப்ராப்தே த்வஷ்டாவிம்சேகலௌயுகே। த்ரைபுராபாரதே யுத்தே நிஹதாராக்ஷஸா புவி । 2 । யதா ப்ரவர்த்தயிஷ்யந்தி மார்கம் பாஷண்ட கோசரம்। ததாஸம்ப்ரார்த்திதோ தேவைர் பகவான் ஹரிரீச்வர:। தத்கர்மதக்ஷம் வினதம் மாதரிச்வானமாதிசத்। வாயுஸ்து யதிரூபேண ஜனிஷ்யதிகலௌயுகே ॥ 4 ॥ ஸதசப்ரமிதிர்பூத்வா கலௌ தர்மான் வதிஷ்யதி। க்ருத்வா ஸச்சாஸ்திர ஸந்தர்பம் ஸ்தாபயிஷ்யதி ஸத்பதம் ॥ 5 ॥ ஏவமேவ மகாதேவி நாராயண பராயணா:। காலே காலே பவிஷ்யந்தி தத்ர தத்ர மகாவ்ரதா:। தாம்பரபர்ணீ நதீயத்ர க்ருதமாலா பயஸ்விநீ। காவேரீ ச மகா புண்யா ததா துக்தாபகாநதீ ॥ 7 ॥ ஏதன் மத்யப்ரதேசேஷு தர்ம: பாதேன திஷ்டதி। ம்லேச்சாக்ராந்தம் பவேதன்யத் பூதளம் து கலௌயுகே ॥ 8 ॥ கலௌ பாகண்ட பூயிஷ்டம் புண்யக்ஷேத்திரம் பவிஷ்யதி। நது விஷ்ணு கதா க்வாபி நாபி வைஷ்ணவ பத்ததி: ॥ 9 ॥ ஆக்ராந்தேஷுச தேசேஷு ம்லேச்சரூபைஸ்ச ராக்ஷஸை:। த்ராவிடேஷு ச தேசேஷு தர்ம: ஸ்தாஸ்யதி பாதத: ॥ 11 ॥ பஞ்சத்ராவிடகோ தர்மோ மோக்ஷஹேதுர் பவிஷ்யதி। யதா யதாஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பார்வதி ॥ 11 ॥ அவதீர்ய ததாவிஷ்ணு: தர்மகோப்தாஸ்வயம் ஹரி:। ஸம்பிரதாயேஷு நஷ்டேஷு ஸர்வதர்மேலயம்கதே । 12 । விஷ்ணோரனுக்ஞயா பக்தா: கலௌ தர்மப்ரவர்த்தகா:। ஏவம் பாகவதா தர்மாபவிஷ்யந்தி யுகே யுகே ॥ 13 ॥ என்றிவ்வாறு காணப்படுகிறது. இதன் அபிப்பிராயமாவது:— கலியில் பாஷண்டிகளின் மதம் எங்கும் வியாபித்து கொஞ்சமும் தர்மமில்லாமல் போகும்பொழுது அதாவது வைவஸ்த மன்வந்தாம் 28வது கலியுகத்தில் முன்பு பாரத யுத்தத்தில் இறந்த ராக்ஷஸர்களும் த்ரி புராஸுரர்களும் பூமியில் வேத பாஹ்யர்களான பாஷண்டிகளுககு அநுகமான தர்மமார்க்கத்தை ப்ரவிருத்திக்கும்பொழுது, தேவர்களால் பிரார்த்திக்கப்பட்ட பகவான் நாராயணன் இவ்வகையான துஷ்ட நிக்ரஹத்தினால் ஸமர்த்தரான வாயுபகவானை ஆக்ஞாபிக்கவும்

அவர் யதிரூபத்துடன் கலியுகத்தில் அவதாரம் செய்யப்போகிறார். அவரே பூர்ணப்ரக்ஞர் என்று பெயர் பெற்று கலியில் தர்மங்களைச் சொல்லப்போகிறார். ஸச்சாஸ்திரங்களைச்செய்து ஸாது மார்கத்தை ஸ்தாபிக்கப்போகிறார். இவ்வாறு பார்வதியே அந்தந்த ஸமயங்களில் அந்தந்த ப்ரதேசங்களில் ஜனங்கள் மகா தர்மிஷ்டர்களாய் விஷ்ணுபக்தர்களாகப் போகின்றனர். தாம்பரபர்ணீநதி, கிருதமாலா நதி, பயஸ்வினி நதி, மகா புண்ணியமான காவேரி நதி, பாலாறு இவைகளின் மத்யப்ரதேசங்களில் தர்மம் ஓர் பாதத்துடன் இருக்கும். இதர ப்ரதேசங்களெல்லாம் கலியுகத்தில் மிலேச்சர்களால் [வைதீகமான தர்மமார்கத்தை விட்டவர்களால்] ஆக்கிரமிக்கப் பட்டவைகளாய் ஆகின்றன. புண்யக்ஷேத்திரங்களிலெல்லாம் வேதபாஹ்யமான பாஷண்டிகளின் மதம் நிலை நிற்கப்போகிறது. எங்கும் விஷ்ணு கதையோ வைஷ்ணவ பக்தியோ காணப்படப்போவதில்லை. எல்லா ப்ரதேசங்களும் மிலேச்ச ரூபிகளான ராக்ஷஸர்களால் ஆக்ரமிக்கப்படவும் திராவிட தேசத்தில் கால்பாகம் தர்மம் இருக்கப்போகிறது. பஞ்சத்ராவிடத்திலுள்ள தர்மம் தான் மோக்ஷத்திற்கு காரணமாக ஆகப்போகிறது. தர்மத்திற்கு குறை ஏற்படும் பொழுதெல்லாம் தர்ம ரக்ஷகரான பகவான் விஷ்ணு அவதாரம் செய்து அதை நிலைநிறுத்துகிறார். ஸத்ஸம்பிரதாயம் நஷ்டமாகி எல்லா தர்மமும் இருந்தவிடமெல்லாம் தெரியாமற்போகும் பொழுது விஷ்ணுவின் ஆக்ஞையின்பேரில் அவருடைய பக்தர்கள் கலியில் தர்மங்களை பிரவிருத்திக்கப் போகின்றனர். இவ்வாறு பாகவத தர்மங்கள் ஒவ்வொரு யுகத்திலும் ஏற்படப்போகின்றன. என்று.

(தொடரும்.)

---

## மாத்வமித்திரன் சந்தாதாரர்களான ஸன்மித்ர மண்டலத்திற்கு

# ஓர் வேண்டுகோள்.

---

கோயமுத்தூரிலிருந்து ஸ்ரீமான் T. G. கோகுலசந்திரராவ் எழுதுவதாவது;—

அஹோபாக்யம் அஹோபாக்யம் மாத்வமார்கானுவர்த்திநாம் ।
தெய்வம் ரமாபதிர்யேஷாம் யத்குருர்பாரதீபதி: ॥



என்று சொல்லப்பட்டிருக்கிறபடி ஸ்ரீ மத்வாசாரியாரை பின்பற்றிய நீங்களே மகா பாக்யசாலிகள். மகா தன்யர்கள். இதில் சிறிதும் சந்தேகமில்லை. பகவான் உங்களிடம் தன் அநந்த ஹஸ்தங்களால் ஸகலஸௌபாக்யங்களையும் கொடுத்து மாச்சரியமில்லாமல் செய்து ஐகமத்யம் விவேகம் விசாரணம் சிரத்தை பக்தி ப்ரேமை முதலியவைகளை உண்டாக்கி இந்த ஏழு வருஷகாலமாய் இம்மாத்வமித்திரனை போஷிக்கச்செய்து வந்திருக்கிறார். அதுபோல் இவ்வருஷமும் நீங்கள் ஆதரிக்கப்போகிறீர்கள் என்பது ஸத்யம். சாஸ்திராப்யாஸமே ஸர்வ தர்மத்திற்கு மூலம். இம்மாத்வ மித்திரன் மூலமாய் சாஸ்திராப்யாசம் செய்வதால் ஸத்ஸம்பிரதாயங்களின் பழக்க வழக்கங்கள் ஏற்பட்டு ஸமஸ்த தர்மங்களின் ஸாதனங்களும் ஏற்படுகின்றன. மேலும் எமது மத்வசாஸ்திர கிரந்தங்கள் படிப்போர்களில்லாமல் அதன் தத்வப்பிரசாரத்திலில்லாமல் நமது மதம் க்ஷீணதசையடைந்து வந்திருக்கிறது. எந்த மதமானுலென்ன எல்லாம் ஓர் தெய்வத்தைத்தானே கூறுகின்றனவென்று சிலர் கக்ஷி பேசுகிறார்கள். இன்னது ஸாரம் இன்னது அஸாரம் என்று தெரிந்துகொள்ளாமல் நாய் நரி பன்றி முதலானவைகள் புஜிப்பதை விவேகம் படைத்த மனுஷ்யர்கள் புஜித்துவிடுவதா? பகவானை நிர்குணராயும் நிஷ்கிரியராயும் நிரவயவராயும் ஜீவனுக்கு அபின்னராயும் போதிக்கும் வேத பாரத கீதா ப்ரம்ம ஸூத்ராதிகளுக்கு விருத்தமான கிரந்தங்களை ஒருபோதும் படிக்கலாகாது. ஜீவாத்மைக்யம் ஒருபோதும் சித்திப்பதில்லை. நமது மாத்வமித்திரன் போதிக்கும் மாத்வ கிரந்தங்களோ நிஜாநந்தமாகிய மோக்ஷத்தைக் கொடுக்கிறவைகள். விவேகிகளுக்குப் படிக்கப்படிக்க ஆனந்தத்தை விருத்தி செய்கின்றன. நல்லொழுக்கத்துடன் கூடி மதுர ரசம் மிகுந்த இந்த கிரந்தங்களை நித்யம் படியுங்கள். விஷ்ணுவின் சரிதையை தினம் கேட்பதாலும் படிப்பதாலும் மனதின் பரிசுத்தத்தன்மை ஏற்படுகிறது. இன்னும் மத்வகிரந்தங்கள் எப்பேர்ப்பட்டதென்றால் அநேக பிரமாண வாக்யங்கள் அறிவிக்கிறபடி பூர்வ ஜன்மத்தில் செய்த விசேஷ புண்ணியங்களால்தான் அதில் ருசியை உண்டு பண்ணக் கூடியவை. துர்மதங்களை ஸம்பூர்ணமாய் கண்டிக்கக்கூடியதா

யும் வித்வான்களின் மனதை விகாசப்படுத்துவதாயும் மங்களமான சப்தார்த்தங்களால் சோபிப்பதாயுமிருக்கின்றன. தாயைப்போல் பாதகமான காரியங்களை விலக்கச்செய்து ஸாதகமானவைகளை அழுத்தமாய் போதிப்பவைகள். இப்பேர்ப்பட்ட எமது மத்வமத கிரந்தங்களை ஸுலபமாய் தமிழில் போதிக்கும் மாத்வமித்திரனுக்கு சந்தாதாரர்களாக இருந்து இதரர்களை சந்தாதாரர்களாய் சேரச்செய்ய சிரமம் வகிக்கவேண்டியது அவசியம். ஒருவருக்கு ஓர் மாத்வமித்திரன் வந்தால் சந்தாதாரர்களாயில்லாதவர் அதைப்படித்து ஆனந்தப்படுகிறார்கள் என்பது பலரும் அறிந்த விஷயம். அப்பேர்ப்பட்டவர்கள் எல்லோருமே தம் தம் கடமையை உணர்ந்து பொருளுதவிசெய்து சந்தாதொகை அனுப்பி சந்தாதாரர்களாய் சேர்ந்தால் இப்பத்திரிகையை நடத்துவதில் இதன் ஆசிரியருக்கு எந்த கஷ்டமும் இருக்கமாட்டாதுதான். ஒவ்வொரு மாத்வசபையாரும் தம் தம் அங்கத்தினர்களை மாத்வமித்திரனுக்கு பொருளுதவி செய்து அதை போஷிக்கச்செய்ய வேண்டும். ஒவ்வொரு சபையின் ஆபீசுகளிலும் இரண்டு மூன்று மாத்வமித்திரன் பத்திரிகைகளாவது வரவழைக்கப்பட்டு வாசிக்க கொடுக்கப்படவேண்டும். இது மாத்வர்களுக்கு இன்றியமையாத பத்திரிகை. கேவலம் தாவரங்களும் கூட தம் தம் கஷ்டங்களை கவனியாது வெயில் மழை காற்று குளிர் முதலியவைகளைப் பொறுத்திருந்து இதரர்களுக்கு உதவுகின்றன. அதுபோல் ஓர் காரியம் சிறிது கஷ்டமாகத்தோன்றிடினும் விவேகிகளான நாம் எமது மதப்பத்திரிகையான இம்மாத்வமித்திரனுக்கு சந்தாதாரர்களை விருத்திப்படுத்தும் வேலையில் ஈடுபடவேண்டும். இந்த வேலையைச் செய்து முடிப்பது இந்த சுத்தவைஷ்ணவ மதப்ரவர்த்தகராய் சதுர் தச புவனங்களுக்கும் ஆதி குருவாய் பலித்தா ஸூக்தம் முதலான வேதப்ரதிபாத்யராய், அஷ்டமகிஷிகளால் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை பக்தகோடிகள் பூஜித்து ஸர்வ மங்களங்களை அடையும்படி உடுபியில் ப்ரதிஷ்டை செய்தவராய், ஸமஸ்த பாகவத தர்மங்களை உலகில் பிரசாரப்படுத்தியவரான ஸ்ரீமத்வாசாரியாருக்கு செய்யும் மகா சேவையாகும். இதனால் உங்களுக்கு இகத்தில் பூஜ்யதையும் பரத்தில் மௌக்திக



ஸுகமும் உண்டு. மனஸாகர்மணா வாசா யா சேஷ்டா மம நித்யசா| கேசவா ராதனே ஸாஸ்யாத் ஜன்ம ஜன்மாந்தரேஷ்வபி||

---

# புத்தக வரவு.

---

அமாவாஸை தர்பணம் செய்யும் மந்திரங்களை தமிழில் இந்நகர் டவுன் ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸமீரஸமய ஸீரீஸ் ஆசிரியர் ஸ்ரீமான் M ராமராவ் பிரசுரம் செய்திருக்கிறார். தேவநாகரம் தெரியாதவர்களுக்கு இப்புஸ்தகம் மிகவும் உபயோகமானது என்று சொல்லத்தேவையில்லை. இதன் கிரயம் அணா ஒன்று என்றறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்நூல் இதன் ஆசிரியரிடம் கிரயத்திற்கு கிடைக்கும்.

பிரம்மஸூத்திர நாமாவளி வேதார்த்த நிர்ணயம் செய்யும் பிரம்ம மீமாம்ஸா சாஸ்திரமெனப்படும் ஸ்ரீபாதராயணரின் பிரம்ம ஸூத்திரங்களால் தேவபூஜா காலத்தில் பகவானை அர்ச்சிக்க உபயோகப்படும்படியாய் எமது மத்வபாஷ்யப்படி பிரம்மஸூத்திரங்களை நாமாவளி ரீதியில் இந்நகர் ஸ்ரீசக்கிரபாணிஸ்வாமி கீழவீதியில் இருக்கும் ஆஞ்ஜனேய புஸ்தகாலயம் ஸ்ரீமான் R. குருராஜாசாரியார் பிரசுரம் செய்திருக்கிறார். இதன் விலை 0—2—6 என்றும் தபாற்கூலி 0—0—9 வேறு என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் ஆசிரியரிடம் இந்நூல் கிரயத்திற்கு கிடைக்கும்.

சித்தன் இனியதான அநேக கட்டுரைகளடங்கிய இம்மாதப் பத்திரிகை உத்தம க்ஷேத்திரமான பழனியிலிருந்து வெளியாகி எமக்கு பிரதிமாதமும் அனுப்பப்பட்டுவருகிறது. தற்போது 8-வது சஞ்சிகை நடப்பதாய் தெரிகிறது. ஸ்ரீமான் C. P. சாமி இதன் ஆசிரியராவார். வருடம் 1-க்கு எட்டணா சந்தா தொகை என்றும் வி. பி.-யில் பத்திரிகை அனுப்பப்படமாட்டாதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஸிவில் ஸூட்.

த்வைதமத ப்ரதிஷ்டாபனாசாரியான் என்னும் பட்டப்பெயருக்குப் பொருத்தமாய் மகத்தான மதஸ்தாபன காரியங்களைச் செய்துவரும் ஸ்ரீஉத்தராதி மடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீஸத்யத்யான தீர்த்தஸ்வாமிகள் விநோதமாய் ஸிவில்ஸூட் என்னும் அதி

சயப் பெயர்கொண்ட ஓர் அற்புதமான நூலை இயற்றி அத்வைதத்தைக் கண்டித்து ஸ்ரீமத்வமதத்தை ஸ்தாபித்திருக்கிறார். தற்காலம் ஸிவில் கோர்ட்டுகளில் வாதி பிராது கொடுக்கவும் பிரதிவாதி அதை மறுத்து ஸ்டேட்டுமெண்டு கொடுப்பதும், கோர்ட்டார் விவாதிக்கப்படும் அம்சங்கள் விஷயமாய் அநேக இஷ்யூக்களை ஏற்படுத்தி அந்தந்த இஷ்யூக்களின் விசாரணைக்கு இரு கக்ஷிக்காரர்களும் தம்தம் சாதகமான சாக்ஷிகளையும் தஸ்தவேஜிகளையும் ஆஜர்படுத்துவதும், எதிர் கக்ஷிக்காரர்கள் குறுக்கு விசாரணை முதலியவைகளால் அவைகளை துர்பலப்படுத்துவதும் இருதரத்து வக்கீல் தம்தம் கக்ஷியின் பலாபலத்தைப்பற்றி வாதிப்பதும் முடிவில் கோர்ட்டார் ஜட்ஜிமெண்டு எழுதிக்கொடுத்து டிக்கிரி செய்து விடுவதுமான வழக்கத்தை அனுஸரித்து அந்த வாசகப்படி, பூலோகத்து தர்மாதர்மங்களுக்கு விவஸ்தாபமாகிய யமலோகத்து ப்ரதான நகரமான ஸம்யமினீபுரத்திலிருந்து வரும் ஹைகோர்ட்டில், சீப் ஜஸ்டிஸ் தர்மராஜ ப்ரபு H. B. அவர்களின் முன்னிலையில் 28-வது கலியுகம் சாலிவாகன சகம் 1849ல் இந்த வேதாந்தகேஸ் விசாரணை நடந்ததாகவும், ப்ராம்மண்யம் முதலான வர்ணங்கள் பிரம்மசர்யம் முதலான ஆசிரமங்கள், யாகயக்ஞாதிகிரியைகள் கங்காதி தீர்த்தங்கள் ஸ்வர்காதி பரலோகங்கள் தேவர்கள் வேதங்கள் இப்பூலோகம் முதலாது எல்லாஜகத்தும் ஸத்யம், விஷ்ணு ஸர்வோத்தமன் ஸர்வக்ஞன் ஜீவனைவிட வேறானவன் இந்த பேதக்ஞானமே மோக்ஷ ஸாதனம் என்னும் வைதீகமதம், அனாதிகாலமாய் வந்துகொண்டிருக்க கௌடபாதாசாரியாரும் அவருடைய சிஷ்யரான சங்கராசாரியாரும் மேற் சொன்ன வைதீக மதத்திற்கு ஆதாரமாயுள்ள வேதம் ப்ரம்மஸூத்திரம் பகவத்கீதை இவைகளுக்கு வேறு அர்த்தத்தை கல்பித்து விக்ஞானவாதிகள் சூன்யவாதிகள் என்னும் இருவகை பௌத்த மதத்தையும் வைதீகமாய் தோன்றும்படிசெய்து சாமானியர்களையும் மோசம் போகும்படிசெய்து வைதிக தத்வத்திற்கு விருத்தமாய் விஷ்ணு ஸர்வோத்தமன் அன்று ஸர்வக்ஞன் அன்று, ஸர்வகர்த்தாவுமன்று, அநந்தகல்யாண குணபரிபூரணனன்று, அவன் எந்த தர்மமுமில்லாதவன் ஜீவனைவிடவேறானவனல்ல, அவன்வேறு என்னும் பேதக்ஞானம் மோக்ஷஸாதனமல்ல, நானே ப்ரம்மம் என்னும் ஞானம்தான் மோக்ஷஸாதனம் பிராம்மண்யாதி வர்ணங்கள் பிர்ம்மசர்யாதி ஆசிரமங்கள் முதலான மேலே கூறப்பட்ட எல்லா ஜகத்துமே பொய்மித்தியை முக்காலங்களிலும் இல்லாதது என்று போதித்து, எமது ப்ராசீனமான சட்ட புஸ்தகமாகிய பகவத்கீதை 16-வது அத்யாய செக்ஷனில் நஷ்டாத்



மானோ அல்பபுத்தய: ப்ரபவந்த்யுக்ரகர்மாண: க்ஷயாய ஜகதோஹிதா: என்று சொல்லியவாறு தாங்கள் அதோகதியை அடைவதுமல்லாமல் இதர ஸாது ஸமூகங்களையும் ஆஸ்திக மதத்தினின்றும் விடுவித்து அவைதீக மதத்தை ஆசிரியிக்கச் செய்து அதோகதியை அடையும்படி செய்கின்றனரென்றும் ஆகையால் கோர்ட்டார் ஸாது ஜனங்களின் நன்மைக்காக பரப்ரம்மம் ஜீவனைவிட வேறானவன் ஸர்வோத்தமன் பிராம்மண்யாதி வர்ணங்கள் முதலான ஜகத்து ஸத்யம் மித்யையல்ல இவைகள்தான் வைதிகமான தத்வங்கள் என்றும் பிரதிவாதிகள் கூறும் ப்ரம்மம் நிர்குணம் ஜீவனைவிட அபின்னம் ஜகத்துப் பொய் முதலான தத்வம் அவைதிகம் என்றும் அவர்களின் உபதேசம் சாஸ்திரவிருத்தம் என்றும் தீர்ப்பு கூற வேண்டுமென்று வைதீக ஆஸ்திக மகாஜனங்களின் சார்பாக விஷ்ணுதாஸாசாரியார் தாவா செய்ததாகவும் அத்வைதிகளின் சார்பாக கங்காதரசாஸ்திரிகளை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டிருப்பதாகவும் பிரதிவாதி இவைகளை மறுத்து ஒவ்வொரு அம்சத்தையும் ஆக்ஷேபிக்கவும் தம் மதமே வைதீகமென்று வற்புறுத்தி ஸ்டேட்மெண்டு கொடுக்கவும், கோர்ட்டார் இவ்விஷயம் முதலே தீர்மானிக்கப்பட்டிருப்பதால் மறுபடியும் விசாரணைக்குக் கொண்டுவர கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று பிரதிவாதி ஆக்ஷேபித்திருப்பதால் இது Resjudicata ரெஸ்ஜூடிகேடா ஆகிறதா இல்லையா என்பது முதல் இஷ்யூவாகவும், ப்ராம்மண்யாதிவர்ணங்கள் முதலான ஜகத் ஸத்யமா மித்தியையா, ஸ்வப்னம் ஸத்யமா மித்யையா என்பது இரண்டாவது இஷ்யூவாகவும், ப்ரப்ரமம் ஜீவனைவிட வேறானதா அல்லவா என்பது மூன்றாவது இஷ்யூவாகவும், பரப்ரம்மம் ஸர்வக்ஞத்வம் ஸர்வகர்த்ருத்வம் முதலான ஸகலகுண பூர்ணமானதா அல்லவா என்பது நான்காவது இஷ்யூவாகவும், அத்வைத மதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் பேதமுண்டா இல்லையா; அத்வைதமதம் வைதிகமதமா அல்லவா என்பது ஐந்தாவது இஷ்யூவாகவும் ஏற்படுத்தவும், இந்த ஐந்து இஷ்யூக்களின் சம்பந்தமாய் பல சாக்ஷி விசாரணைகளும் பல உபநிஷத் வாக்யங்களின் விமரிசைகளும் செய்யப்பட்டு, இருகக்ஷிக்காரர்களின் வக்கீல்களும் ஆர்குமெண்டு செய்தபின் வாதி பிருதுப்படி டிக்கிரி ஜட்ஜ்மெண்டுகள் செய்திருப்பதாய் அற்புதமான பெரியதொருநூல் எழுதப்பட்டு அச்சாகி முடிந்திருக்கிறது. இது தமிழ் தெலுங்கு கன்னடம் முதலான அநேக பாஷைகளில் திருப்பதி ஸ்ரீமன்மத்வஸித்தாந்த அபிவிருத்திகாரிணி சபையாரால் வெளியிடப்பட்டு தேசமெங்கும் இலவசமாய் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆறு சாஸ்திரங்களிலும் மகா பண்டிதரென்று உலகப்பிரஸித்தியடைக்

திருக்கும் ஸ்ரீ ஸத்யத்யான தீர்த்தஸ்வாமிகள் எமது ஸ்ரீமத்வமத கிரந்தங்களான ந்யாயாம்ருதம் சந்திரிகை ந்யாயஸுதை முதலான கிரந்தங்களில் கண்டிருக்கும் விஷயங்களை ஸாரமாய் எடுத்து ஸாமானியர்களும் அறிந்துகொள்ளும்படி லௌகீக ரீதியில் சொல்லி அத்வைதமதத்தைக் கண்டித்து த்வைதமதத்தை ஸ்தாபித்திருப்பதின் மகத்வத்தை உலகில் எந்த ஆஸ்திக மாத்வரும் கொண்டாடாமல் இருக்க முடியாதென்பது திண்ணம். இதில்கண்டுள்ள ஒவ்வொரு விஷயமும் மிக்க கடினமான சாஸ்திர விஷயமானதால் இந்நூலை பன்முறை படித்தால்தான் இதன் பெருமையும் ஸ்ரீ மத்வமதத்தின் அருமையும் விளங்கும். எளிய தமிழ் நடையில் ஸ்ரீமான் எஸ். கிருஷ்ணாசாரியாரைக்கொண்டு இதன் தமிழ் பதிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. தற்போது 3வது இஷூவைத் தவிர இதர எல்லா இஷூக்களின் விசாரணையும் அச்சாகி முடிந்திருக்கிறது. இந்நூலை அடைய விரும்புவோர் ஸ்ரீமான் S. கிருஷ்ணாசாரியார் 10. ஹனுமந்தராயன் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ். என்னும் விலாஸத்துக்கு தபால் பாக்கிங் சிலவுக்கு அடியிற்கண்டபடி போஸ்டேஜ் ஸ்டாம்பை அனுப்பி இலவசமாய்ப்பெறலாம்.

| | | |
|---|---|---|
| 1—2வது இஷூக்களடங்கிய முதல்பாகம் | | 0—4—0 |
| 4வது | ,, | 0—3—0 |
| 5வது | ,, | 0—3—0 |
| 1, 2, 4, 5. | ,, 3 புஸ்தகங்களுக்கு | 0–10—0 |

ரிஜிஸ்டர் போஸ்டில் அனுப்பப்பட இச்சைப்பட்டால் 0—3—0 போஸ்டேஜ ஸ்டாம்பு ப்ரத்யேகமாய் அனுப்பப்படவேண்டும்.

---

## செய்தித்திரட்டு.

---

ஸ்ரீ நாராயணனின் ஸ்வயம் வ்யக்த க்ஷேத்திரங்களிலொன்றாகிய ஸ்ரீமுஷ்ண க்ஷேத்திரத்தில் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் மடத்தில் ஆஸ்திகர்களின் பண உதவியைக்கொண்டு நானது ௵ ஆகஸ்டு௴ 15. 16. 17உ களில் ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் ஆராதனை மகோத்சவம் நடத்துவதாய் ஸ்ரீமுஷ்ணம் வைஷ்ணவர்களின் சார்பாக ஸ்ரீமான் கெஜேந்திரம் ஸ்ரீனிவாஸாசாரியார் அறிவிக்கிறார்.



மதராஸ் மாத்வா அஸோஸியேஷனின் ஒன்பதாவது வருஷத்திய ரிபோர்ட்டிலிருந்து இந்த 1934—35ம் வருஷத்தில் மொத்த வரவு ரூ. 248—4—9 என்றும் சிலவு ரூ. 228—9—8 மொத்த இருப்பு ரூ. 580—0—8 என்றும் தற்போது 56 அங்கத்தினர்கள் இருப்பதாயும் 14—5—34 முதல் 29—3—35 வரையில் சுமார் 23 நிகழ்ச்சிகள் நடந்திருப்பதாயும் முக்யமாய் முளுபாகலு மடம் ஸ்ரீப்ரஸன்னநிதி தீர்த்தஸ்வாமிகளுக்கு பிக்ஷையளிக்கப்பட்டதும். மதராஸ் கான்வோகேஷனுக்கு வந்திருந்த 12 B.A., M.A., வித்யாவான்களுக்கு நல்லாதரவு அளித்ததும் ஸ்ரீமான் கஞ்சி சுப்புராவ் லைப்ரேரி திறந்து வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தகுந்ததாய் இருப்பதாயும் தற்காலம் ஸ்ரீமான்களான S. மாதவராவ் B.A., L.T., அவர்கள் அக்கிராஸனாதிபதியாயும் A. நாஸிக்ராவ் காரியதரிசியாயும் பொக்கிஷதாராகவும் இருப்பதாய் தெரியவருகிறது.

கோயமுத்தூர் ஜில்லா தாராபுரத்தில் 11-5-35 முதல் 19-5-35 வரை ஸ்ரீகாடு ஆஞ்ஜனேயருக்கு ரதோத்சவம் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டதென்றும் இராப்பகல் ஒவ்வொரு வேளையிலும் சுமார் 2500 பிராம்மணர்களுக்கு போஜனம் அளிக்கப்பட்டுவந்ததென்றும் ஸ்ரீ வையிரகிங்காசபையாரால் நடத்தப்பட்டுவரும் பாடசாலையின் 30 வித்யார்த்திகள் ஸ்வாமி பின்னாடி வேதபாராயணம் செய்துவந்தது மெச்சத்தகுந்ததாய் இருந்ததென்றும் ரிடையர்ட் ரெயில்வே மெயில் கார்டர் ஸ்ரீமான் வெங்கட நரசய்யரால் சுமார் 7 கலம் அரிசி சமைக்கக்கூடியதாய் சுமார் ரூ. 250 பொருமானமுள்ள பித்தளை பாத்திரங்களும் ஸ்ரீமான் பாங்கு அப்பாஜிராயர் அவர்களால் ரதமிழுக்க சுமார் ரூ 100 பொருமானமுள்ள இரும்புச்சங்கிலியும் மேற்படி தேவஸ்தானத்துக்கு ஸமர்ப்பிக்கப்பட்டதென்றும் காரியதரிசி ஸ்ரீமான் C. V. சுப்புராவ் அறிவிக்கிறார்.

மதுரை பிரம்ம வித்யாச்ரம சபையின் ஆதரவின்கீழ் த்வைதமத ஸம்பந்தமாய் 18—2—34 முதல் 22—6—35 வரையில் இச்சபை காரியதரிசி ஸ்ரீமான் ரமணா அ ராமகிருஷ்ணாசாரியாரால் சுமார் 15 உபன்யாஸங்களும் 18—3—34 முதல் 1—7—35க்குள் இச்சபையின் பிரஸிடெண்டும் ஸம்ஸ்கிருத பண்டிதருமான பாரிஸ்டர் அட்லா ஸ்ரீமான் K. L. வெங்கடராம் அவர்களால் 13 உபன்யாஸங்களும் 5—9—34 முதல் 25—5—35 வரையில் இச்சபையின் சென்னையில்

மெம்பரும் அத்யயன பண்டிதருமான ஸ்ரீமான் ஜே. வி. ரெங்காசாரியார் அவர்களால் 9 உபன்யாஸங்களும் 11—6—34 முதல் 18—6—35க்குள் இச்சபை கௌன்ஸிலரும் மதசீர்திருத்தக்காரருமான ஸ்ரீமான் C. R. ராமய்யர் அவர்களால் 7 உபன்யாஸங்களும் நடந்ததாய் காரியதரிசியால் அறிவிக்கப்பட்டிருக்கிறது

ஸ்ரீரங்கம் மத்வஸித்தாந்த சபையின் ஆதரவில் 17—5—35உ யன்று மானாமதுரை ஹரிதாஸர் ஸ்ரீனிவாசாசாரியார் அவர்களால் ஸீதாகல்யாண கதையும் 19, 26உகளிலும் ஜூன்மீ 2, 9உகளிலும் ஸ்ரீமான் யதுநாதாசாரியாரால் கீதா உபன்யாஸமும் நடத்தப்பட்டதென்றும் காரியதரிசி அறிவிக்கிறார்.

---

## விசேஷ தினங்கள்.

### சிராவண மாஸம்

| | | |
|---|---|---|
| 3—8—35 | சனிவாரம் | நாகசதுர்த்தி. |
| 4—8—35 | பானுவாரம் | நாகபஞ்சமி, கருடபஞ்சமி. |
| 9—8—35 | சுக்ரவாரம் | வரலக்ஷ்மிவ்ரதம். |
| 10—8—35 | சனிவாரம் | ஏகாதசி உப. |
| 11—8—35 | பானுவாரம் | த்வாதசி, ஹரிவாஸரம் மணி 6 54 க்கு மேல் பாரணை தயிர் விரதம் ஆரம்பம். |
| 12—8—35 | ஸோமவாரம் | ப்ரதோஷம், |
| 14—8—35 | பௌர்ணமி | சிரவணம் உப. இல்லை. விஷ்ணு உப. உண்டு, ரிக்வேதம் உபாகர்மம், யஜுர் வேதம் உபாகர்மம். |
| 15—8—35 | குருவாரம் | காயத்ரி ஸஹஸ்ராவிருத்தி |
| 16—8—35 | சுக்ரவாரம் | ஸ்ரீ ராகவேந்திரஸ்வாமிகளின் 265வது வருஷத்திய புண்யதினம். |
| 21—8—35 | புதவாரம் | கோகுலாஷ்டமி உபவாஸம் இரவில் ஸ்ரீ கிருஷ்ண பூஜை. |
| 22—8—35 | குருவாரம் | எல்லா மடத்தார்களுக்கும் ஸம்பிரதாயத்தார்களுக்கும் காலையில்தான் பாரணை. |
| 24—8—35 | சனிவாரம் | ஏகாதசி உப. |
| 26—8—35 | ஸோமவாரம் | ப்ரதோஷம். |
| 28—8—35 | புதவாரம் | தர்சம் விஷ்ணு ப உப. |

---

208729
சென்னை ... 600 003

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், ச்லோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் மிஞ்சி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற்கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் ச்லோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் ச்லோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன ச்லோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனாமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ 3 Regd. No. M. 2419


# டி. எஸ். ஆர்.
அண்டு
# கம்பெனி,
## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 — தந்திவிலாஸம் “கோகுல்”

எங்கள் வாஸனாதிரவியசாலையில் தயாரித்து விற்பனைக்கு தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னாணப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| ஷேவர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| கசாங்கம் | ஊதுவத்திகள் |

சந்தனாதித்தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.


Printed at SRI VENKATESWAR PRINTING WORKS and Published by Bhagavata Ranganathachariar, Kumbakonam.